விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஆு மாசி மீ 21-ம் உ | திங்கட்கிழமை | (05 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 07 | ஓசை 15

## "ஈழப் பிரகடனத்தைக் கண்டு புலிகள் ஏமாற மாட்டார்கள்"

(கொழும்பு)

வரதராஜப் பெருமாளின் தன்னாட்சிப் பிரகடனத்தைப் பற்றி ஒன்றும் பெரிதுபடுத்தவேண்டிய அவசியமில்லை. ஈழப்பிரகடனமானது விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாத ஒருவித நடவடிக்கையாகும். இச் செயலானது விடுதலைப் புலிகளைக் குழப்பத்தில் மாட்டி, அவர்களைச் ஸ்ரீலங்கா அரசுடன் முரண்பட வைக்கும் நோக்கத்துடன் எடுத்த ஒரு தந்திரமான முடிவு என்று தி ஐலண்ட் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் தறாக்கி குறிபிடுகிறார். அவர் தொடர்ந்து குறிப்பிடுவதாவது:-

விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை தமிழ் நாட்டுடனும் டெல்லியுடனும் பலப்படுத்திக் கொள்வதற்குமுன், எப்படியாவது கொழும்புடனான உறவைக் குலைக்க ஈ. பி. ஆர். எல். எவ். உம் பெருமாளும் விரும்புகிறார்கள்.

சுதந்திர தன்னாட்சி பெற்ற ஈழத்தை பிரபாகரன் தன்னிச்சையாகப் பிரகடனப்படுத்தியிருந்தால் மற்றவர்கள் அதைப்பற்றி பெரிதுபடுத்தியிருப்பார்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாணசபையை கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு!

## நாகூர் கடற்கரையில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

(சென்னை)

இலங்கையிலிருந்து தப்பிச் சென்ற தமிழ்க் குழுக்கள் நாகூர் கடற்கரை மண்ணுக்குள் புதைத்து வைத்திருந்த ஏராளமான கண்ணிவெடிகள் துப்பாக்கிகள் என்பன தமிழ் நாட்டுப் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மேலும் பல ஆயுதங்கள் அங்கு புதைக்கப்பட்டிருக்கலாமென பொலிசார் நம்பியுள்ளனர். இதனால் அக்கரையோரப் பகுதிகளில் தேடுதல் பணிகள் தொடருகின்றன.

கடந்த சிலநாட்களாகப் பல அகதிகள் இலங்கையிலிருந்து திருச்சி, வேதாரணியம் மற்றும் மண்டபம் ஆகிய இடங்களுக்கும் சென்று கொண்டிருக்கையில் அகதிகளின் மத்தியில் தமிழ்க் குழுக்கள் சிலரும் ஊடுருவியிருப்பதாக அங்குள்ள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பிரகடனம் எச்சமயத்திலும் வரலாம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கான பிரகடனத்தை எந்நேரமும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா பிறப்பிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநர் நளின் செனிவரெத்தினா ஜனாதிபதிக்கு சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்தே ஜனாதிபதி இம் முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சுதந்திர சுயாட்சி உரிமை பெற்ற ஈழம் ஜனநாயகக் குடியரசின் அரசியல் நிர்ணயசபையாக வடக்கு கிழக்கு மாகாண பதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்களாம்.

ஆளுநரின் ஆலோசனையை பெற்றோ அல்லது பெறாமலோ ஜனாதிபதி வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைக்கலாம் என்றும் சட்ட ஆலோசகர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள் அதேவேளை முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தனது ஒத்துழைப்பின்றி மாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று கூறியதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் 1983-ல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 6-வது சட்டத்திருத்தப்படி பிரிவினை கோருவது யாப்பு விதிகளுக்கு முரணானது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்த நிலை என்றுமாறுமோ?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரக் கேடுகள் தொடர்பாக இம்மாவட்ட மக்கள் புகார் தெரிவித்து வருகிறார்கள். ஒரே ஒரு வைத்தியசாலை இருந்தும் அது சரியாக செயல்படுவதில்லை. இங்கு தேவைக்கேற்ற படுக்கை வசதிகள் இல்லை, மின்சார வசதிகள் இல்லை, பிரசவ விடுதியின் நிலைமை படுமோசம், வைத்திய சாலையில் சிலந்தி வலைகள்தான் உள்ளன. மின்விளக்குகளும், மின் விசிறிகளும் பழுதடைந்த நிலையில்தான் உள்ளன.

## காண்டீபன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

## பிரேமா - மாத்தயா இன்று மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை் சமீபமிடு



தலைப் பட்சமாக நிறைவேற்றிய தீர்மானம் குறித்துப் இன்றைய சந்திப்பின்போது பேசப்படலாமென அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

உயர்கல்வி விஞ்ஞான அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் சென்ற வாரம் மட்டக்களப்புக்குச் சென்று திரு. மகேந்திரராஜாவைச் சந்தித்துப் பேசியி



# எச்சமயத்திலும் வரலாம்!

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைப்பதற்கான பிரகடனத்தை எந்நேரமும் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா பிறப்பிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.**

வடக்கு கிழக்கு மாகாண சபை ஆளுநர் நளின் செனிவரெத்தினா ஜனாதிபதிக்கு சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்தே ஜனாதிபதி இம்முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சுதந்திர சுயாட்சி உரிமை பெற்ற ஈழம் ஜனநாயகக் குடியரசின் அரசியல் நிர்ணயசபையாக வடக்கு கிழக்கு மாகாண சபை தன்னைமாற்றிக்கொண்டது சட்டத்துக்குப் புறம்பானது என்றும், யாப்பின் 154 (எல்) ஷரத்துப்படி மாகாண சபையைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என்றும் சட்ட நிபுணர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்களாம்.

ஆளுநரின் ஆலோசனையை பெற்றோ அல்லது பெறாமலோ ஜனாதிபதி வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைக்கலாம் என்றும் சட்ட ஆலோசகர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள் அதேவேளைமுதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தனது ஒத்துழைப்பின்றி மாகாண சபையைக் கலைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று கூறியதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் 1983-ல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 6-வது சட்டத்திருத்தப்படி பிரிவினை கோருவது யாப்பு விதிகளுக்கு முரணானது என்பது குறிப்பிடத்தக்கது.

## கப்பலில் தப்பியோட்டம் அகதி அந்தஸ்து உண்டாம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நிலைகொண்டிருந்த ஈ. பி. ஆர். எல். எவ். ஈ. என். டி. எல். எவ். மற்றும் ரெலோ இயக்க உறுப்பினர்கள் அவர்களது குடும்பத்தவர்கள், உறவினர்கள் என்று பலதரப்பட்டவர்களும் இப்போது கப்பல்களிலும், படகுகளிலும் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இந்தியாவுக்குத் தப்பியோடுபவர்கள் முதலில் இந்தியாவில் ஒரு விண்ணப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈழப் பிரகடனம் ஒரு எச்சரிக்கை போராட்டமே வேண்டாம்

(திருகோணமலை)

பாராளுமன்ற உறுப்பினரான யோகசங்கரியிடம் ஒரு தலைப்பட்சமான ஈழப்பிரகடனம் பற்றிக் கேட்டபோது இது இலங்கை அரசுக்கு விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை என்றும், கடந்த 42 வருடங்களாக இழுபட்டு வரும் இனப்பிரச்சனைக்கு ஆழமான பரிமாணத்தை வெளிப்படுத்தவே இது மேற்கொள்ளப்பட்டது என்றும் சொன்னார்.

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கம் ஒருதலைப்பட்சமான ஈழக் குடியரசை நிலைநிறுத்த ஆயுதப் போராட்டத்தில் ஒரு போதும் இறங்கமாட்டாது. அமைதியான ஒரு அரசியல் தீர்வையே அது நாடி நிற்கின்றது என்றும் பாராளுமன்ற உறுப்பினரான யோகசங்கரி தெரிவித்தார்.

## திருமலையில் கொள்ளை

(திருமலை)

திருமலை நகரில் அமைந்துள்ள டொலர் ஏஜன்சி கடையில் கடந்த வெள்ளிக்கிழமை வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம் ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தினர் சென்று அறுபதினாயிரம் ரூபா பணத்தைக் கொள்ளையடித்துள்ளனர். இக்கொள்ளையைத் தடுக்க முயன்றவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

## அநுராதபுரத்துடன் இணைப்பு விவசாயிகள் எதிர்ப்பு

(அநுராதபுரம்)

வன்னிப்பகுதியிலுள்ள மன்னார், வவுனியா ஆகியமாவட்டங்களிலுள்ள கட்டுக்கரைக்குளம், அகத்திமுறிப்புக்குளம், வியாழக்குளம், பாவற்குளம் ஆகிய தமிழ்ப்பிரதேசங்களுக்குரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அநுராதபுரம் பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியில் நடந்த நீர்ப்பாசனத் திட்டங்களுடன் இணைந்து தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த விவசாயிகள் தமது அத்தியாவசிய நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்திற்குச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

நீர்ப்பாசன இலாகா ஊழியர்களுடன் தொடர்வு கொள்

(6ஆம் பக்கம் பார்க்க)

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சுகாதாரக் கேடுகள் தொடர்பாக இம்மாவட்ட மக்கள் புகார் தெரிவித்து வருகிறார்கள். ஒரே ஒரு வைத்தியசாலை இருந்தும் அது சரியாக செயல்படுவதில்லை. இங்கு தேவைக்கேற்ற படுக்கை வசதிகள் இல்லை, மின்சார வசதிகள் இல்லை, பிரசவ விடுதியின் நிலைமை படுமோசம், வைத்திய சாலையில் சிலந்தி வலைகள்தான் உள்ளன. மின்விளக்குகளும், மின் விசிறிகளும் பழுதடைந்த நிலையில்தான் உள்ளன.

## காண்டீபன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு போராளிகள் ஆஸ்பத்திரிவீதி வழியாக மோட்டார் சயிக்கிளில் வந்து கொண்டிருக்கையில் அதிவேகமாக வந்த மினிபஸ் மோதி விடுதலைப் புலி உறுப்பினர் காண்டீபன் படுகாயமடைந்தார். சுயநினைவு இழந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர் சிகிச்சைக்காக இன்று கொழும்பு கொண்டு செல்லப்படவுள்ளார். இவர் மேஜர் கேடியின் சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கில் முஸ்லிம் தலைவர்களை மாத்தயா சந்தித்தார்

(காத்தான்குடி)

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர்கள் நேற்றையதினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி தலைவர் கோபாலசாமி மகேந்திரராசா உட்பட முன்னணி தலைவர்களைச் சந்தித்து உரையாடினார்கள்.

கிழக்கிலங்கை தமிழ் - முஸ்லிம் ஒற்றுமையை குறித்து எதிர்காலத்தில் இரு சாராரும் இணைந்து இரு சமூகங்களும் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு கூட்டாகத் தீர்வு காணக்கூடிய வழிமுறைகள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஜவான்களின் கைவரிசை

(அச்சுவேலி)

இப்பகுதியில் நிலைகொண்டிருந்த அமைதிப்படையினர் வெளியேறியபின் வீடுகளைப் பார்க்கப்போன வீட்டுச்சொந்தக்காரர்களுக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது. அமைதிப்படையினர் வீடுகளில் இருந்த தளபாடங்கள், படுக்கை வசதிகள், மின்சார உபகரணங்கள், படுக்கை விரிப்புகள். மெத்தைகள், கட்டில்கள், மின்சார இணைப்புகள், தண்ணீர்ப்பம்ப், மோட்டர்கள், இயந்திர உபகரணங்கள், தெய்வச் சிலைகள், படங்கள், திரைச்சேலைகள் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.


# இன்று மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை சமீபத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா)வும் இன்றுமாலை மீண்டும் சந்தித்துப் பேசுகிறார்கள்



இரு தலைவர்களும் சென்ற மாதம் சந்தித்துப் பேசியதன் தொடர்ச்சியாகவும் வடக்குக் கிழக்கு மாகாணசபை ஈழப் பிரகடனத்திற்கு முன்னறிவித்தல் கொடுத்துஅரசியல் நிர்ணயசபையாகத் தன்னைத் தானே மாற்றிக்கொண்டு ஒரு தலைப் பட்சமாக நிறைவேற்றிய தீர்மானம் குறித்தும் இன்றைய சந்திப்பின்போது பேசப்படலாமென அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.



உயர்கல்வி விஞ்ஞான அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் சென்ற வாரம் மட்டக்களப்புக்குச் சென்று திரு. மகேந்திரராஜாவைச் சந்தித்துப் பேசியிருந்தும் இதுபற்றி அமைச்சர் ஹமீத் ஜனாதிபதியிடம் அறிக்கைசமர்ப்பித்திருந்ததும் தெரிந்ததே.

## உத்தரவின்றி இறைச்சி விற்றால் கடுந்தண்டனை

(வண்ணார்பண்ணை)

நாட்டின் சமீப கால அசாதாரண சூழ்நிலையைக் கொண்டு பலர் சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டு வருவதாக புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. உத்தரவு பெறாது காட்டு மிருகங்களை வேட்டையாடி வந்து சுகாதார சீர்கேடான முறைகளில் முக்கிய சந்திகளில் இறைச்சி வியாபாரம் செய்வதாக மக்கள் புகார் செய்து வருகிறார்கள்.

தட்டாதெருச் சந்தி, ஆலடிச் சந்தி, ஐந்து சந்தி, நாவாந்துறைச் சந்தை முன்பக்கம், தாமரை வீதி ஆகிய இடங்களில் உள்ள மக்கள் இது தொடர்பாகப் புகார்கள் தெரிவித்திருக்கிறார்கள். இப்பகுதிகளுக்கு வரும் யாழ். மாநகரசபை சுகாதார அதிகாரிகள் மிரட்டப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள சட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடிய பொதுக்கூட்டம்

## நேற்று மட்டுநகரில் நடந்தது

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் முதலாவது மாபெரும் பொதுக்கூட்டம் நேற்றைய தினம் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்திற்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் சரிகாலன் தலைமை வகித்தார்.

சுமார் இருபதாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் முஸ்லீம் மக்கள் தமது தலைவர்களின் பேச்சுக்களை இடைக்கிடை கரகோஷம் செய்து, மிகவும் உன்னிப்பாக செவிமடுத்தார்கள் அத்தோடு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைவர்களை மக்கள் அணுகி மிகவும் அன்போடு அளவளாவினார்கள். பின் கடந்த காலங்களில் இந்திய இராணுவத்தினராலும் அவர்களது கைக்கூலிகளாலும் தமக்கு ஏற்பட்ட அனர்த்தங்களை கண்ணீர் மல்க எடுத்துரைத்தனர். அவற்றையெல்லாம் மக்கள் முன்னணித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மருதங்கேணி வைத்தியசாலை அவலநிலை எப்போது தீரும்?

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் உள்ள ஒரே ஒரு அரசினர் வைத்தியசாலையான. மருதங்கேணி அரசினர் கிராமிய வைத்தியசாலை சுமார் 40 ஆண்டுகளாக எவ்வித குறிப்பிடத்தக்க அபிவிருத்தியும் இல்லாத வகையில், ஆரம்ப காலகட்டத்துடன் பல குறைபாடுகளின் மத்தியில் இயங்கி வருகின்றது.

இக் குறைபாடுகளின் மத்தியிலும், அங்கு பணிபுரியும் வைத்தியர், ஊழியர்கள் ஆகியோரின் அயராத உழைப்பினால் அப்பகுதி மக்கள், இவ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கம்போடியாவுக்கு ரஷ்ய உதவி

(கம்போடியா)

கம்போடியாவிற்குத் தனது அரசு வழங்கி வரும் ஆயுத உதவிகளை நிறுத்தி விட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது. அதே வேளையில் கம்போடிய போராளிகளுக்கு அமெரிக்காவும், சீனாவும் தொடர்ந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவில் யுத்தவிமானங்கள் தயாரிக்க சோவியத் உதவி

(திருச்சி)

யுத்த விமானங்களும், பயணிகள் விமானங்களும் எமது நாட்டில் விரைவில் உற்பத்தி செய்யப்படும் என ஹைதராபாத் ஆராய்ச்சி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி சோதனைக் கூட இயக்குனர் டாக்டர் ஏ. பி. அப்துல் சலாம் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் கல்லூரி நிகழ்ச்சியில் பேசிய அவர் அண்மையில் எமது சேயற்கைக்கோள் செலுத்தும் நிலையத்தில் இருந்து (அண்மையில்) ஓர் தகவல் தொடர்புச் செயற்கைக் கோள் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் தற்பொழுது இந்திய கைபர் பிளேன் என்னும் புதிய திட்டத்தைக் கடைப்பிடிப்பதாகவும், இத் திட்டத்தில் வான்வெளிக்குச் செல்லும் செயற்கைக் கோளின் இடையில் பதினைந்து வீதம் விண்கலத்தை ஏற்றிச் செல்லலாம் என்றும், தற்போது மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில், தற்பொழுது நடைமுறையில் உள்ள செயற்கைக் கோளில் ஏழில் இருந்து 10 வீதம் வரையிலான விண்கலத்தையே கொண்டு செல்லலாம் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் அணுமின் உற்பத்தியையும் 10,000 மெகாவாட்டாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரம் சோவியத் சிவில் விமானத்துறை அமைச்சர் ஏ. எஸ்சிவிட்டோவின் இந்திய விஜயத்தின் போது இந்தியாவில் சோவியத் அனுசரணையுடன் மிக் யுத்த விமானங்களை தயாரிப்பதென முடிவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இத் தயாரிப்பில் சோவியத் தயாரிப்பான மிக் - 21, மிக் - 27 விமானம் தயாரிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.


## வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

### கவரிடுதல்

அடையாள அட்டைகளுக்கும் மற்றும் நாளாந்தம் கையாளும் ஆவணங்களுக்கும் கவர்ச்சியான பிளாஸ்டிக் கவரிட யாழ். நகரில் தனிச்சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'

### கவரிடுதல்

அடையாள அட்டைகளுக்கும் மற்றும் நாளாந்தம் கையாளும் ஆவணங்களுக்கும் கவர்ச்சியான பிளாஸ்டிக் கவரிட யாழ். நகரில் தனிச்சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'


## சோவியத்தில் அதிபர் ஆட்சிமுறை

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் அரசு நிர்வாக அதிபர் பதவியை ஏற்படுத்துவதற்கான மசோதாவிற்கு சோவியத் யூனியன் உயர்சபை தலைமைக்குழு கடந்த சனிக்கிழமை அங்கீகாரம் அளித்தது. இச்சட்டவாக்கத்தின் மூலம் அதிபர் உயர்ந்த அதிகாரங்களைப் பெறுகின்றார். ஆனால் அவர் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டை ஏற்றே அவர் செயற்பட வேண்டும். அதேவேளை அதிபரின் கட்டுப்பாட்டின்கீழ் சமஷ்டிச் சபை, தேசிய இன சபை என இரு சபைகள் இயங்கும் எனவும் தெரிய வருகின்றது. இவ்விரு சபைகளும் அமைக்கப்படுவதற்கான அங்கீகாரத்தை முன்னரே உயர்சபை தலைமைப் குழு வழங்கியிருந்ததும் குறிசபிடத்தக்கது.

## ஓய்வூதிய வவுச்சர் 7 ம் திகதி யாழ் வரும்

(கோழும்புத்துறை)

பங்குனி மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் நேரில் சென்று எடுத்து வருவதற்கு யாழ். செயலக ஓய்வூதியப் பகுதி அதிகாரி ஒருவர் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு சென்றுள்ளார்.

இம்மாதத்திற்குரிய ஒய்வூ

## வருடா வருடம் 5000 பேர் மரணம்

-- யாழ். சு. க. அதிகாரி

(சுதுமலை)

உலகத்திலே ஒரு வருடத்தில் வயிற்றோட்ட நோயினால் 75 கோடி மக்கள் பாதிப்படைகின்றார்கள். இவர்களில் அதிகமானோர் ஐந்து வயதுக்குட்பட்ட சிறார்களே. இலங்கையைப் பொறுத்த மட்டில் வருடத்திற்கு ஐயாயிரம் பேர் இந் நோயினால் இறக்கிறார்கள். யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களில் 10% ஆனோர் இந் நோய்க்குள்ளானவர்களேயாகும்.

இவ்வாறு அண்மையில் திருநெல்வேலியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போது யாழ். சுகாதாரக் கல்வி அதிகாரி கே. வைத்தீஸ்வரன் அவர்கள் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, இலங்கையை பொறுத்த மட்டில் இந்த வயிற்றோட்ட நோய் ''முதன்மை சுகாதாரப் பிரச்சினை'' 25 க்கும் மேற்பட்ட கிருமிகள் இந் நோயை உண்டுபண்ணுகின்றன. ஐம்பது வீதத்திற்கும் அதிகமானோர் வைரஸ் என்ற கிருமியினாலேயே பாதிக்கப்படுகின்றார்கள். இந்நோய் ஏற்படுவதற்குச் சூழல் சுகாதாரமும்பேணப்படாமையும், போசாக்கு நிறைந்த உணவு பற்றாக்குறையும் மூல காரணங்களாக இருக்கின்றன. இந்த நோய்க்குட்பட்ட குழந்தையையெப்படிப் பராமரிக்க வேண்டும், எவ்வாறு இந்கக் குழந்தையை இந் நோயிலிருந்து தப்ப வைக்கலாம் என்பதை தாய்மார்கள் ஓரளவாவது அறிந்திருக்க வேண்டும். நோய் கண்ட குழந்தைக்கு அடிக்கடி வயிற்றோட்டம் இருந்து கொண்டேயிருக்கும். விரைவில் குழந்தையின் உடல் வரட்சியைக் கண்டு மரணத்தின் எல்லைக்கு சென்று விடும். எனவே கிருமி எதிர்க்கும் சக்தியைக் கொண்ட தாய்ப் பால் குழந்தைக்கு அடிக்கடி கொடுக்க வேண்டும். அதைவிட இளநீர், தேசிக்காய் கரைத்த தண்ணீர், கஞ்சி, ஜீவாணி போன்றவற்றைக் கொடுத்து உடலில் நீர்த் தன்மை குறைவதை தடுக்க வேண்டும்.

## ஊழியர் மிரட்டப்படுகிறார்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைப் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறும் சிலரால் மின்சாரசபை ஊழியர்கள் மிரட்டப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

மேற்படி திருட்டு இணைப்புகளை துண்டிக்கும் நோக்குடன் செல்லும் ஊழியர்களை நோக்கியே 'மிரட்டல்' இடம் பெற்று வருவதாக கூறப்படுகிறது.

பொறுப்பானவர்கள்இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இதோடுசம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (தி)

## சொற்பொழிவு புத்தகமானது

திருக்கேதீச்சரம், திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினரால் ஈச்சமோட்டை ஸ்ரீ ஞான வைரவர் கோயிலில் நடாத்தப் பெற்றுவந்த சொற்பொழிவுகள் அடங்கிய ஐம்பது பக்கங்களைக் கொண்ட நூல் ஒன்று அண்மையில் மேற்படி சபையினரால் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூலில் பதின்மூன்று தரமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்நூலில் பல்கலைக்கழகப் பேராசியர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் அறிஞர் பெருமக்களது கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இந்நூலானது க. பொ. த. உயர்தர வகுப்பில் இந்துநாகரீகத்தினை ஓர் பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது.

## மக்களைக் காப்பதற்கு வந்துவிட்டார்கள் வீர வேங்கைகள்!

## மெய்வல்லுனர் போட்டி

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுனர் போட்டி நாளை காலை கல்லூரியின் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது

காங்கேசன்துறை கொத்தணி அதிபரும், கல்லூரி அதிபருமான திரு. க.இராசதுரை தலைமையில் நடைபெறும். இவ்விழாவிற்கு இக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், தற்போதைய பண்டத்தரிப்புகோட்டக்கல்வி அதிகாரியுமான திரு எம். சிவராசரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

கடந்தமூன்றுவருடங்களுக்கு மேலாக நடைபெற முடியாமல் இருந்த இவ்விளையாட்டுப் போட்டி இவ்வருடம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## கட்டாக்காலி நாய்கள் தொல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக ஊழியர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இரவில் நோயாளிகள் வெளியே செல்லும்போதெல்லாம் இந்நாய்கள் நோயாளர்களை மிரட்டுவதாகவும் அவ்வூழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## திருமலையில் கொள்ளை

(திருகோணமலை)

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வங்கிக்குப் பணம் கொண்டு வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டரிடம் இருந்த பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றவர்கள் ஈ.பி.ஆர். எல். எவ் இயக்கத்தைச்சேர்ந்வர்கள் எனத்தெரிய வருகின்றது.


ஈழநாதம்
தமிழீழ மக்களின்
இதயநாதமாக ஒலிக்க
எமது வாழ்த்துக்கள்

கட்டிடப் பொருட்கள், தீந்தைவகைகள்
விவசாய உபகரணங்கள், கிருமிநாசினிவகைகள்
மின்சார உபகரணங்கள், Slon P. V. C
பைப் வகைகள் அனைத்திற்கும் ...

ஸ்ரீ அபிராமி

திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்.


## இன்றைய சினிமா


72 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10. 30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
**வருஷம் 16**
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
**அவள் ஒரு**

அதிபரின் கட்டுப்பாட்டின்கீழ் சமஷ்டிச் சபை, தேசிய இன சபை என இரு சபைகள் இயங்கும் எனவும் தெரிய வருகின்றது. இவ்விரு சபைகளும் அமைக்கப்படுவதற்கான அங்கீகாரத்தை முன்னரே உயர்சபை தலைமைப் குழு வழங்கியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஒய்வூதிய வவுச்சர் 7 ம் திகதி யாழ் வரும்

(கோமும்புத்துறை)

பங்குனி மாதத்துக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் நேரில் சென்று எடுத்து வருவதற்கு யாழ். செயலக ஒய்வூதியப் பகுதி அதிகாரி ஒருவர் கடந்த 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொழும்பு சென்றுள்ளார்.

இம்மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர் பத்திரங்கள் அனைத்தும் 7 ஆம் திகதி புதன்கிழமை யாழ். செயலகத்திற்கு எடுத்துவர இருப்பதாகச் செயலக ஒய்வூதியப் பகுதி அலுவலர் அறியத் தருகின்றார். (24)

## மொழி பெயர்க்க உதவி

(கொழும்பு)

சிறந்த சிங்கள நாவல்கள் தமிழில் மொழிபெயர்க்சப் படும் பட்சத்தில் அவற்றை வெளியிட அமைச்சு தன்னாலான சகல உதவிகளையும் செய்யும்.

இந்து சமய, இந்து கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி, தேவராஜ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தெரிவித்தார். (தி)

வேண்டும்.

## சொற்பொழிவு புத்தகமானது

திருக்கேதீச்சரம், திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர் சபையினரால் ஈச்சமோட்டை ஸ்ரீ ஞான வைரவர் கோயிலில் நடாத்தப்பெற்றுவந்த சொற்பொழிவுகள் அடங்கிய ஐம்பது பக்கங்களைக் கொண்ட நூல் ஒன்று அண்மையில் மேற்படி சபையினரால் தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூலில் பதின்மூன்று தரமான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்நூலில் பல்கலைக்கழகப் பேராசியர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் அறிஞர் பெருமக்களது கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இந்நூலானது க. பொ. த. உயர்தர வகுப்பில் இந்துநாகரீகத்தினை ஓர் பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்குப் பயனுள்ளதாக அமைகின்றது.

ட்டரங்கில் நடைபெறவுள்ளது

காங்கேசன்துறை கொத்தணி அதிபரும், கல்லூரி அதிபருமான திரு. க.இராசதுரை தலைமையில் நடைபெறும். இவ்விழாவிற்கு இக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், தற்பேதைய பண்டத்தரிப்புகோட்டக்கல்வி அதிகாரியுமான திரு எம். சிவராசரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

கடந்தமூன்றுவருடங்களுக்கு மேலாக நடைபெற முடியாமல் இருந்த இவ்விளையாட்டுப் போட்டி இவ்வருடம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.


மக்களைக் காப்பதற்கு வந்துவிட்டார்கள்
வீர வேங்கைகள்!

அமைதியான வாழ்வு,
அமைதியான பாடசாலைகள்
அமைதியான குடும்ப வாழ்வு.

எம்மிடம்

- பாடசாலை உபகரணங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- அழகு சாதனப் பொருட்கள்
- பாட்டா பாதணிகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- எவர் சில்வர் பாத்திரங்கள்

லேஸ், லாஸ்ரிக், நூல் வகைகள் இவற்றை மலிவாகப் பெற

விநாயகர் ஸ்ரோர்ஸ்
புத்தூர்

(B 160)



தமிழீழ மக்களின்
இதயநாதமாக ஒலிக்க
எமது வாழ்த்துக்கள்

கட்டிடப் பொருட்கள், தீந்தைவகைகள்
விவசாய உபகரணங்கள், கிருமிநாசினிவகைகள்
மின்சார உபகரணங்கள், Slon P. V. C
பைப் வகைகள் அனைத்திற்கும் ...

ஸ்ரீ அபிராமி
திருநெல்வேலி சந்தி,
யாழ்ப்பாணம்.

(B - 42)



(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)


ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு
தொடர்கதை


## உருளைக் கிழங்கு விலை வீழ்ச்சி

(கோண்டாவில்)

உள்ளூர் உற்பத்தியான உருளைக் கிழங்கு தற்பொழுது 350 லிருந்து 400 ரூபா வரையிலுமே விற்பனை செய்யப்படுகின்றது. உள்ளூர், கொழும்பு சந்தைகளில் ஏற்பட்டுள்ள இந்த விலை வீழ்ச்சியின் நிமித்தம் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஒரு அந்தர் விதை உருளைக் கிழங்கு 1800லிருந்து 2000 ரூபா வரை உற்பத்தியாளர்களால் முதலீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (34)





ஈழநாதமே! காலை விடிந்தவுடன் நீ எமது கைக்கு வாசிப்பதற்கு கிடைத்திடுவாய்.
நல்ல செய்திகளை மக்களுக்கு வீசுகின்றாய். உனது வீரத்தை துணிவுடன் காட்டிவருவதோடு,
இன்று பத்திரிகை விற்பனையில் முன்னோடியாய் திகழ்கின்றாய்.
வாழ்க! உன் பணி

ஞானம்ஸ் அக்கடமி
புத்தூர்

B.161

# காஷ்மீரில் காங்கிரசும், தேசிய மகாநாட்டுக் கட்சியும் வன்முறைகளைத் தூண்டுகின்றன

## பாரதீய ஜனதா கட்சி குற்றச்சாட்டு

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் இன்று நடைபெற்றுவரும் வன்முறைகளை இந்திரா காங்கிரஸ் கட்சியும் பாருக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் கட்சியும் தூண்டி வருவதாக பாரதீய ஜனதாக் கட்சியின் ஜம்மு - காஷ்மீர் கிளைத் தலைவர் பேராசிரியர் சமன்லால் குப்தா கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில் இவ்விரு கட்சிகளும் ஒன்றுமறியாத குழந்தைகள் சென்றுகொண்டிருந்த வாகனம் தாக்கப்பட்டதற்கு எதிராக இராணுவம் எடுத்த நடவடிக்கையைக் கண்டித்திருப்பதில் இருந்து இவர்கள் போடும் இரட்டை வேடம் தெரிவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். கடந்த வியாழக்கிழமை காஷ்மீரில் இராணுவம் சுட்டதில் 40 பேருக்கு மேல் இறந்தது தொடர்பாக இவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அனைத்து இந்திய விடுதலைப்போராட்ட ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் ஜம்முவிலும் காஷ்மீரிலும் ஏற்பட்டிருக்கும் நிலையை சமாளிப்பதற்கு தேசிய பற்றுமிக்க ஜனநாயகவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும்படியும், பாகிஸ்தானுடனான காஷ்மீர் பஞ்சாப் சர்வதேச எல்லையை மூடிவிடும்படியும் இவ் ஸ்தாபனம் கோரியுள்ளது.

அதேவேளை நேற்றுமுன்தினம் காஷ்மீரில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச்சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருவதோடு ஊரடங்குச் சட்டத்தை மீறுவோரைக் கண்ட இடத்தில் சுடும்படியும் இராணுவத்திற்கு உத்தரவும் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஊரடங்குச் சட்டத்தை மீறிய ஒருவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆனால் கடந்த வியாழக்கிழமை நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணை ஒன்றை நடத்துமாறு மத்திய அரசாங்கம் காஷ்மீர் ஆளுனர் ஜக்மோகனைப் பணித்துள்ளது. அதேவேளை நாட்டிற்கு எதிராக நடந்த நாசவேலைகள் தொடர்பாக 16 அரசாங்க ஊழியர்கள் மீது காஷ்மீர் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

## அனைத்துப் போட்டிகளிலும் யாழ். பல்கலைக் கழகம் வெற்றி

யாழ். பல்கலைக் கழக உதை பந்தாட்ட அணி இவ்வருடம் நடந்த அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி வாகை சூடி ஒரு சாதனையை புரிந்துள்ளது.

பல்கலைக் கழக அணி சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் மோதி 3-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டியது. திருநெல்வேலி கலாமன்ற அணியை 5-0 கோல் அடிப்படையில் வெற்றியீட்டியது. அளவெட்டி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை 1-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டியது. நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகத்துடன் மோதி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது, லங்கா சீமெந்து லிமிடெட் அணியுடன் மோதி 2-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டியது. பருத்தித்துறை விளையாட்டுக் கழகத்துடன் மோதி 3-0 என்ற கோல் அடிப்படையிலும் காரைநகர் கோவளம் வி. கழகத்துடன் 3-1 என்ற அடிப்படையிலும் வெற்றியீட்டியது. எம். பத்மநாதன் பயிற்சியாளர் பல்கலைக் கழக அணிக்கு மிகவும் சிறப்பான பயிற்சி கொடுத்து யாழ். மாவட்டத்தில் மிகவும் சிறந்த உதை பந்தாட்ட கழகமாக விளங்குகிறது.

எஸ். பிகராடோ (கப்டன்) கடமைபுரிகிறார். கே. தேவகுமார் உதவி கப்டனாக கடமைபுரிகிறார். மற்றும் வீரர்கள் பின் வருமாறு:- கே. கணேசநாதன், எம். கோகிலதாசன், பி. யேசுதாசன், எஸ். பத்மராஜன், கே. ராஜன், எ. பொன்சொன், எம். இளம்பிறையன், எஸ். ஜெயசீலன், ஈ. பிரபாகரன், எம். முரளீதரன், எம். கொனின்ஸ், என். வரப்பிரகாசம், எஸ். மனோகரன். (42)

## மதகு சேதத்தால் விவசாயிகள் பாதிப்பு

(சித்துங்கேணி)

காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் பிரதான மதகு ஒன்று உடைந்து, நீண்ட காலமாகத் திருத்தப்படாதுள்ளது. வயல்களுக்குச் செல்லும் பிரதான வீதியில் இம் மதகு அமைந்துள்ளது. இப்போது அறுவடைக் காலமாகையால் இவ் வீதியால் வாகனப் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளதென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (23)

## இல்ல விளையாட்டுப் போட்டி

(தீவுப்பகுதி)

மாணவர்கள் படிப்பை மட்டும் முழு நோக்கமாக கொள்ளாது விளையாட்டுத்துறையிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டின் மூலம் புரிந்துணர்வைவளர்க்க கூடியதாக இருக்கும். மேலும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதன் மூலம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகள் உடையவர்களாக மிளிர முடியும். நல்ல சமுதாயத்தை உருவாக்க கூடியதாகவும் இருக்கும்.

வேலணை சைவப் பிரகாச வித்தியா சாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய இப் பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியர் திரு. போ. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. சு. கலாதரன் தலைமையில் இப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. இப் போட்டியில் சம்பன் இல்லம் முதலாவது இடத்தையும், பாரதி இல்லம் இரண்டாம் இடத்தையும், இளங்கோ இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. பரிசில்களை பிரதம விருந்தினர் திரு. சுப்பிரமணியம் வழங்கினார். (15)

## வேலணைக்கு வீதி விளக்குகள்

(தீவுப்பகுதி)

வேலணைப் பிரதேசசபை வேலணை கிராமத்தின் முக்கிய பகுதிகளிற்கு வீதிமின் விளக்குகளை பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளது. கிராமத்தின் பிரதான இடங்களிற்கு ரியூப் லைற்றுக்கள் இவ்வாறு பொருத்தப்படும் மேற்படி சபை கடந்த காலங்களிலும் இவ்வாறு வீதி மின் விளக்குகளை பொருத்தியிருந்தது. ஆனால் அது விஷமிகளாலும் அப்போது இருந்த சூழ்நிலை காரணமாகவும் செயலற்றதாக்கப்பட்டிருந்தது. தற்போது அமைக்கப்படும், வீதி மின் விளக்குகள் எவராலும் திருடப்பட இடமிருக்கமாட்டாது. (15)

## முஸ்லிம் விளையாட்டுக் கழகம் சம்பியன்

யாழ்ப்பாணம் உதவி அர... தாராகக் கடமையாற்றினார்.

இப் போட்டிக்கு பிரதம...

(கலிபோர்ணியா)

அமெரிக்க அரசுத் தலைவர் ஜோர்ஜ் புஷ்ஷும், ஜப்பானியப் பிரதம மந்திரி கைபூவும் கலிபோர்ணியாவில் அமெரிக்க - ஜப்பான் வர்த்தகம் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். இரண்டு நாட்கள் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் வருடாந்தம் அமெரிக்க- ஜப்பான் வர்த்தகத்தில் ஏற்படும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறை பற்றியும், ஜப்பான் நாணயத்தில் ஏற்படும் வீழ்ச்சிப் போக்குப் பற்றியும் ஆராயப்பட்டது. வருடாந்தம் அமெரிக்கா 5000 கோடி டொலரை சென்மதி நிலுவையாக செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலையினைக் குறைக்கும் முகமாக ஜப்பான் சந்தையில் அமெரிக்கப் பொருட்களுக்குக் கூடுதலான இடமளிப்பது பற்றியும் இரு

அமெரிக்க - ஜப்பான்

## தலைவர்கள் சந்திப்பு
## சென்மதி நிலுவை பற்றிப் பேச்சு

தலைவர்களும் ஆராய்ந்தார்கள். எதிர்காலத்தில் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரு தலைவர்களும் உறுதி அளித்தார்கள்.

ஏழு வருடங்களுக்கு மேலாக இருந்து வரும் இ பிரச்சினை சமீப வருடங்களில் உச்சக் கட்டத்தை அடைந்தது. அமெரிக்கா ஜப்பான் பொருட்களுக்கு பல கட்டுப் பாடுகளை விதித்தது. ஜப்பானிற்கும், அமெரிக்காவிற்கும் உள்ள இந் நெருக்கடியைப் பொருளியலாளர்கள் தொக்கோ கோலா -ரோயாட்டாப் பிரச்சினை எனக் குறிப்பிடுவார்கள்.

## பத்து மாதத்தில் 3 தேர்தல்கள்

கிரேக்க பாராளுமன்றத்தால் புதிய ஒரு அதிபரைத் தேர்ந்தெடுக்க முடியாமல் போய்விட்டதால், புதியதாகத் தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த பத்து மாத காலத்தில் நடைபெறும் மூன்றாவது தேர்தல் இதுவாகும். மார்ச் மாதம் 8 ஆம் திகதி இத்தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் நாட்டில் இருந்து தமிழ் ஆயுதக்குழுக்கள் வெளியேற்றம்

(சென்னை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இந்தியப்படையினரின் விலகலையடுத்து பாதுகாப்புக் கருதி தமிழ் நாட்டில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் போராளிக் குழுக்கள் தமிழ் நாட்டுப் பொலிஸ்காரரின் தொல்லை தாங்க முடியாமல் தமிழ் நாட்டைவிட்டு வேறு மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருப்பதாக தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆந்திராவிற்குச் செல்லும் போராளிக்குழு ஒன்று அங்கு ஆளும் கொங்கிரஸ் கட்சியின் உதவியுடன் குண்டூர் என்னுமிடத்திற்கு அருகே முகாம்கள் அமைக்கப்பட்டு, தங்கவும் பயிற்சி பெறவும் முடிவு செய்துள்ளது என்றும் குண்டூருக்கு அருகே உப்பங்கழி வழியாக இலங்கைக்குப் படகுகளில் செல்ல முடியும் என்பதனால், அந்த இயக்கக் குழு ஒன்று குண்டூரில் தங்க முடிவு செய்திருப்பதாகவும் அறிய வருகின்றது.

தமிழ் நாட்டில் இயக்கங்களுக்கு பொலிஸாரின் உதவி கிடைப்பதில்லை என்றும் தற்போது தமிழ் நாட்டில் உள்ள முகாம்களில் ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, ஈ. என். டி. எல். எவ், புளட் ஆகிய இயக்கங்களோடு தமிழ்த் தேசிய இராணுவத்தையும் சேர்த்து 1300 பேர் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர் என்றும் தெரியவருகின்றது.

இயக்கங்களில் ஒன்று பாண்டிச்சேரி கடற்கரைப் பகுதிகளில் முகாமமைப்பதில் ஈடுபட்டுள்ளதென்றும் தெரிய வருகின்றது. வெளி மாநிலங்களில் தங்குவதால் விட்டுப் போன ஆயுதப் பயிற்சிகளைத் தொடரலாம் என்றும் விடுதலைப் புலிகளை எதிர்க்க சக்தி வாய்ந்தஅணியாக வளர முயற்சிசிக்கலாம் எனவும் தெரிய வருகிறது.

# எல்லா இலக்கிய அமைப்புக்களும் இணைய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இசை நாடக வரலாறு என்ற நூலின் வெளியீட்டுரை நிகழ்த்த வந்திருப்பது சந்தோஷம் தருகிறது. இந்த விழா எல்லா இலக்கிய அமைப்புகளும் இணைவதற்கான ஆரம்ப முயற்சியாக அமைகிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சனிக்கிழமை நடைபெற்ற காரை செ. சுந்தரம்பிள்ளையின் 'ஈழத்து இசை நாடக வரலாறு' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்தும் போது, பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். இலக்கிய வட்டம் ...கிறது. தகவல்களை நமது மக்களிடையே பெற்று தரவுகளை நமது மட்டத்தில் செய்ய வேண்டும்.

வரலாற்றுக்கும் புவியியலுக்கும் இல்லாத தன்மை கலைகளுக்குண்டு.

எழுத்தாளர் செங்கை ஆழியான் இவ்விழாவிற்கு தலைமை வகித்துப் பேசும் போது 'யாழ் இலக்கிய வட்டம் ஆரம்பித்து 22 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இதுவரை இவ்வட்டத்தினால் 49 நூல் ...சென்று தரவுகளைப் பெற்று இந்த நூலைப் படைத்துள்ளார். ஆனால் இதில் உள்ள தரவுகள் எல்லாம் உண்மையானவை என்று சரியாகச் சொல்ல முடியாது என்றும் குறிப்பிட்டார்.

திரு. செம்பியன் செல்வன் உரையாற்றும் போது, இந்த நூல், ஒரு ஆய்வு நூலாக யாழ். பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பேராசிரியர் சிவத்தம்பியின் பார்வையின் பின்னர் வெளியிடப்பட்டு

சிமெந்து விக்கெட் அணியு டன் மோதி 2-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டியது. பருத்தித்துறை விளையாட்டுக் கழகத்துடன் மோதி 3-0 என்ற கோல் அடிப்படையிலும் காரைநகர் கோவளம் வி. கழகத்துடன் 3-1 என்ற அடிப்படையிலும் வெற்றியீட்டியது. எம். பத்மநாதன் பயிற்சியாளர் பல்கலைக் கழக அணிக்கு மிகவும் சிறப்பான பயிற்சி கொடுத்து யாழ். மாவட்டத்தில் மிகவும் சிறந்த

(சித்தங்கேணி)

காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் பிரதான மதகு ஒன்று உடைந்து, நீண்ட காலமாகத் திருத்தப்படாதுள்ளது. வயல்களுக்குச் செல்லும் பிரதான வீதியில் இம் மதகு அமைந்துள்ளது. இப்போது அறுவடைக் காலமாகையால் இவ் வீதியால் வாகனப் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளதென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (23)

கடமை, கண்ணியம், கட்டுப்பாடுள் உடையவர்களாக மிளிர முடியும். நல்ல சமுதாயத்தை உருவாக்க கூடியதாகவும் இருக்கும்.

வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகளில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய இப் பாடசாலையின் இளைப்பாறிய ஆசிரியர் திரு. போ. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. சு. கலாதரன் தலைமையில் இப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது. இப் போட்டியில் சம்பன் இல்லம் முதலாவது இடத்தையும், பாரதி இல்லம் இரண்டாம்

(தீவுப்பகுதி)

வேலணைப் பிரதேசசபை வேலணை கிராமத்தின் முக்கிய பகுதிகளிற்கு வீதிமின் விளக்குகளை பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளது. கிராமத்தின் பிரதான இடங்களிற்கு சியூப் லைற்றுக்கள் இவ்வாறு பொருத்தப்படும் மேற்படி சபை கடந்த காலங்களிலும் இவ்வாறு வீதி மின் விளக்குகளை பொருத்தியிருந்தது. ஆனால் அது விஷமிகளாலும் அப்போது இருந்த சூழ்நிலை காரணமாகவும் செயலற்றதாக்கப்பட்டிருந்தது. தற்போது அமைக்கப்படும், வீதி மின் விளக்குகள் எவராலும் திருடப்பட இடமிருக்கமாட்டாது. (15)

ஆளும் கொங்கிரஸ் கட்சியின் எல். எவ், ரெலோ, ஈ. என். தெரிய வருகிறது.

# முஸ்லிம் விளையாட்டுக் கழகம் சம்பியன்

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் அனுசரணையுடன் விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்ட நொக்அவுட் போட்டியில யாழ் முஸ்லிம் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இவ் விறுவிறுப்பான சம்பியன் மோதல்ல் யாழ் முஸ்லிம் விளையாட்டுக்கழக "எ" பிரிவுக் கோஷ்டியும் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக "எ" பிரிவுக் கோஷ்டியும் கலந்து கொண்டன.

யாழ் முஸ்லிம் சழகத்தின் ஆட்டம் ஆரம்பத்திலிருந்து முடியும்வரை சிறப்பாக இருந்தது.

யாழ் முஸ்லிம் வி. கழகம் இடை வேளைக்கு முன்பு 2 கோலைப் போட்டு முன்னணியில் நின்றது. பின்பு மேலும் ஒருகோலைப் போட்டு 3-0 கோலகளால் வெற்றி பெற்றது.

சென்/ நீக்கலஸ் வி. கழகம் பல கோல்களைப் போடும் சந்தர்ப்பத்தை பிரயோசனப் படுத்த முடியவில்லை.

இப் போட்டிக்கு திரு. எஸ். அனரனிப்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இப் போட்டிக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட யாழ் உதைபந்தாட்ட லீக்கின் உப தலைவர் எ.எஸ். மனுவல் அவர்களுக்கு இகோஷ்டி வீரர்களை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மாகாண விளையாட்டு அதிகாரி திரு. பி. ஏகாம்பரத்தினால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

யாழ் முஸ்லிம் லீக் முன்பு நடைபெற்ற பல இறுதிப் போட்டிகளிலும் சம்பியன் கேடயங்களை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (42)

# காத்தவராயன் எமது பாரம்பரியத்தைப் பேணுகின்றது.

(யாழ்ப்பாணம்)

"இந்த நாட்டில் வாழும் தமிழ் இனம், வேறு ஓர் பிரிவாக அழிக்கப்பட்டு விடாது காப்பாற்றுவதற்கும் எமது கலைப்பாரம்பரீயங்களை ஓர் ஊன்று கோலாக பயன்படுத்துவதற்கும், யாழ். பல்கலைக் கழக தமிழ் துறை இந்த காத்தவராயன் கூத்தை இருபது வருடங்களின் பின் மேடை ஏற்றியிருப்பது எல்லோராலும் வரவேற்கத்தக்கது. அதற்காக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் இவர்களையே பாராட்ட வேண்டும்.

நேற்று முன்தினம் திருநெல்வேலி, முத்துத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்ற காத்தவராயன் இசை நாடகத்தின்போது நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அ. மகாலிங்கம் அவர்கள் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்திற்கு வித்தியாலய அதிபர் திருமதி க. சிகம்பரநாதன் தலைமை தாங்கினார். பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் உட்பட பல கல்வி அதிகாரிகளும் இக் கூட்டத்தில் உரை நிகழ்தினர். (லோ

# எல்லா இலக்கிய அமைப்புக்களும் இணைய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இசை நாடக வரலாறு என்ற நூலின் வெளியீட்டுரை நிழ்த்த வந்திருப்பது சந்தோஷம் தருகிறது. இந்த விழா எல்லா இலக்கிய அமைப்புகளும் இணைவதற்கான ஆரம்ப முயற்சியாக அமைகிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சனிக்கிழமை நடைபெற்ற காரை செ. சுந்தரம்பிள்ளையின் 'ஈழத்து இசை நாடக வரலாறு' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிசழ்த்தும் போது, பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். இலக்கிய வட்டம் ஒழுங்கசெய்திருந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசும் போது, இசை நாடகம் என்பது தமிழ்ப் பண்பின் தன்மைகளைக் வெளிக் கொண்டு வருகிறகலையாகும் நாடகம் அரங்கியல் என்பன பொதுவான சமூக வளர்ச்சிக்கு உதவுகின்றன.

ஆராய்ச்சிகளை பல்கலைக் கழகங்கள் தான செய்ய வேண்டும் என்ற எண்ணம் நிலவுகிறது. தகவல்களை நமது மக்களிடையே பெற்று தரவுகளை நமது மட்டத்தில் செய்ய வேண்டும்.

வரலாற்றுக்கும் புவியியலுக்கும் இல்லாத தன்மை கலைகளுக்குண்டு.

எழுத்தாளர் செங்கை ஆழியான் இவ்விழாவிற்கு தலைமை வகித்துப் பேசும் போது 'யாழ் இலக்கிய வட்டம் ஆரம்பித்து 22 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இதுவரை இவ்வட்டத்தினால் 49 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த நூல் இசை நாடக வரலாற்றை ஆவணப்படுத்தித் தருகிறது, இசை நாடக வரலாற்றின் மூலம் பெருமை சேர்ந்த அறிஞர்களை ஞாபகப்படுத்துகிறது என்று குறிப்பிட்டார்.

எழுத்தாளர் சொக்கன் ஆய்வுரை நிகழ்த்தும் போது, நூலாசிரியர் மக்களிடம் சென்று தரவுகளைப் பெற்று இந்த நூலைப் படைத்துள்ளார். ஆனால் இதில் உள்ள தரவுகள் எல்லாம் உண்மையானவை என்று சரியாகச் சொல்ல முடியாது என்றும் குறிப்பிட்டார்.

திரு. செம்பியன் செல்வன் உரையாற்றும் போது, இந்த நூல், ஒரு ஆய்வு நூலாக யாழ். பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பேராசிரியர் சிவத்தம்பியின் பார்வையின் பின்னர் வெளியிடப்படுவதால் இதற்கொரு சிறப்புண்டு என்றும் யாழ், இலக்கியவட்டம் தன் நீண்ட கால வரலாற்றில் பல உபயோகமான படைப்புக்களை வெளியிட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

நல்லைகுருமகாசன்னிதானம் சோமசுந்தர பரமாசாரியசுவாமிகள் ஆசியுரை வழங்கினார். (தி)

# வட்டுக்கோட்டையில் உடற்பயிற்சிப் போட்டி

(சித்தங்கேணி)

வட்டுச்கோட்டை கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டி சனிக்கிழமை வட்டு. இந்துக் கல்லூரி மைதானத்தில் வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு. சி. டாஸ் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாமிடம்: அராலி இந்துக் கல்லூரிக்கும், 19 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடம் வட்டு இந்துக் கல்லூரிக்கும், இரண்டாம் இடம் அராலி இந்துக் கல்லூரிக்கும்,

17 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாமிடம் அராலி இந்துக் கல்லூரிக்கும், இரண்டாமிடம் அராலி சரஸ்வதி ம. வித்தியாலயத்திற்கும்,

17 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள் பிரிவில் முதலாம் இடம் அராலி இந்துக் கல்லூரிக்கும், இரண்டாமிடம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கும் கிடைக்கப் பெற்றது.

13 வயதுக்குக் கீழ்ப்பட்ட ஆண்கள் பிரிவில் முதலாம் இடம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திற்கும், இரண்டாமிடம் வட்டு. இந்துக் கல்லூரிக்கும்,

13 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள்பிரிவில்முதலாமிடம் வட்டு. இந்துக் கல்லூரிக்கும், இரண்டாமிடம் அராலி கிழக்கு அ. மி. த. க. பாடசாலைக்கும் கிடைத்தது. (23)

# முதலுதவிச் சான்றிதழ்

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி சென். ஜோன்ஸ் முதலுதவிப் பிரிவினரின் பயிற்சியில் சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 18 ஆந் திகதி (18. 3. 90) ஞாயிற்றுக் கிழமை புங்குடுதீவு சுப்பிரமணிய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக வடபகுதிசென். ஜோன்ஸ் ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்கள் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினர்களாக சென். ஜோன்ஸ் உதவிஆணையாளர் திரு. நா. போஜன், திரு. செல்வரஞ்சன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (15)

# தொழிலாளர் தட்டுப்பாடு

(சித்தங்கேணி)

காரைநகரில் நெல் அறுவடை தற்போது துரிதமாக நடைபெற்று வருகிறது. அரிவி வெட்டுதல், சூடடித்தல் போன்ற வேலைகளுக்குத் தொழிலாளர்கள் தட்டுப்பாடு நிலவுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். தினக் கூலியும் நாளொன்றிற்கு நூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (23)

# இ. போ. ச. வெற்றி

(சித்தங்கேணி)

காரை விளையாட்டுக் கழகத்திற்கும், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர் சாலை விளையாட்டுக் கழகத்துக்குமிடையே கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், இ. போ. ச. சாலை 4-1 கோல்களால் வெற்றியீட்டியுள்ளது. (23)

# கல்விச் சீர்திருத்தத்தின் பின் பாடசாலைகள் தன்னாதிக்கம் பெற்றிருக்கும்

(கொழும்பு)

இளைஞர் விவகார ஆணைக் குழு கல்வி தொடர்பான அதன் அறிக்கையில் கூறிபிருக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் பொழுது பள்ளிக்கூடங்கள் தன்னாதிக்கமுடையனவாக இயங்கும் என்று தெரியவருகிறது.

ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் ஆகியோரைக் கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சபைகள் ஒவ்வொரு பாடசாலையிலும் அமைக்கப்படும் என்றும், பள்ளிக்கூடங்களை தலையீடின்றி சுதந்திரமான நிறுவனங்களாக இயக்க அபிவிருத்திச் சபைகளுக்கு சகல அதிகாரங்களும் வழங்கப்படுவதோடு கல்வி அமைச்சு இணைப்பு நிறுவனமாக மாத்திரம் இயங்கும் என்றும் கல்வி அமைச்சர் எம். லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.

பள்ளிக்கூடங்கள், ஆரம்பப் பாடசாலை, கனிஷ்ட உயர் நிலைப் பாடசாலைகள், சிரேஷ்ட உயர் நிலைப் பாடசாலைகள் எனப்பிரிக்கப்படும். ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் ஒரு கனிஷ்ட உயர் நிலைப் பாடசாலையும், ஐந்து உதவி அரசாங்க அதிபர்களுக்கு என ஒரு சிரேஷ்ட உயர் நிலைப் பாடசாலையும் அமைக்கப்படும். கொழும்பில் உள்ள பிரபல்யமான பாடசாலைகளின் தரத்துக்கமைய இப்பாடசாலைகள் அமையும் என்றும், இதனால் கொழும்பில் நல்ல கல்வியைப் பெறலாம் என்று கொழும்பை நோக்கி வரும் மாணவரின் தொகைகுறையும் என்றும் கல்வியமைச்சர் அறிக்கையில் கூறப்பட்டிருக்கும் சீர் திருத்தங்கள் தொடர்பாகப் பேசும் போது கருத்துத் தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் மேலும் தெரிவிந்திருப்பதாவது:

ஆசிரியர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன்மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தத் தான் எண்ணியுள்ளதாகவும், சம்பளத்தில் உள்ள முரண்பாடுகளை இல்லாமல் செய்து ஆசிரியர்களுக்குக் கூடிய சம்பளம், ஊக்குவிப்புப் பணம் போன்ற தொழில் சார்ந்த நன்மைகள், தகுதி காண் பரீட்சை, போணஸ், சேவைக் காலப் பயிற்சி ஆகியன வழங்கப்படும் என்றும்' ஆசிரியர்களுக்கு வதிவிட வசதி செய்து கொடுக்க வழிவகைகள் செய்து கொடுக்கப்படும் என்றும் தெரிவித்த அமைச்சர், மேற்படி சீர்திருத்தங்கள் செயற் படுத்தப்பட்டதும் ஆசிரியர்கள் மேற்சொன்ன நன்மைகளைப் பெறக் கூடியதாக இருக்கும் எனறார்.

கேசிய கல்வி ஆணைக் குழு ஒன்று வெகுவிரைவில் அமைக்கப்படும் என்றும், புதிய கல்விக் கொள்கையை ஆணைக் குழு வகுக்கும் என்றும், இக் குழு தரவுகளைச் சேகரிக்கும் நிறுவனமாக இயங்காது ஞானத்தைச் சேகரிக்கும் நிறுவனமாக இயங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இளைப்பாறிய அரச ஊழியர்களை ஆங்கில ஆசிரியர்களாக நியமிப்பதற்கு 20,000 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும், அவை ஒரு குழுவால் பரிசீலிக்கப்பட்டு, தகமை உடையவர்களுக்குப் பயிற்சி வழங்கிய பின் நியமனம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் லொக்கு பண்டாரா தெரிவித்தார்.

# பூநகரி வைத்தியசாலையில் நெருக்கடி நிலை

(சுதுமலை)

1987 ஆம் ஆண்டில் இலங்கை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களால் முற்றாகச் சேதமடைந்த பூநகரி அரசினர் வைத்தியசாலையின் சவச்சாலைக் கட்டிடமும், வைத்திய அதிகாரி தங்குமிடமும் இன்னும் திருத்திக் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. அத்துடன் மூன்று வைத்திய அதிகாரிகள் கடமையாற்றிய இந்த வைத்தியசாலையில் தற்போது ஒரு அதிகாரி மட்டுமே இருக்கின்றார். வைத்தியசாலைக்கு வேலியோ கேற்றோ இல்லாமல் வனாந்தரத்தில் இருக்கும் ஒரு கட்டிடமாக இந்த வைத்தியசாலை காட்சியளிக்கின்றது. மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் இருக்கும் இந்த வைத்தியசாலையின் குறைபாடுகள் நீங்க சம்பந்தப்பட்ட சுகாதார திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா என்று பொதுமக்கள் கேட்கிறார்கள். (19)

## நிருபர்களுக்கு ஒரு அறிவித்தல்

ஈழநாதம் பத்திரிகையின் சகல நிருபர்களும் எதிர்வரும் புதன்கிழமை 7-3-90 அன்று காலை 10-00 மணிக்கு எமது காரியாலயத்தில் சமூகம்தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- செய்தி ஆசிரியர்

## பொருட்காட்சியில் புலிக்கொடி வெற்றி

(யாழ்ப்பாணம்)

விக்ரோரியா வீதியில் அமைந்துள்ள மனைப் பொருளியல் கல்வி நிறுவனம் ஒன்றில் நடைபெற்று வரும் பொருட்காட்சியில் புலிக்கொடி கேக் ஐசிங் முதலிடம் பெற்றது. மேலும் இக் கல்வி நிறுவனத்தில் பயிலும் பெண்களினால் தயாரிக்கப்பட்ட தையற் பொருட்கள் கைவேலைப் பொருட்கள் மற்றும் உள்ளூரில் பெறப்பட்ட மூலப் பொருட்களை கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்கள் பலவும் வைக்கப்பட்டிருந்தன. (லோ)

## பூநகரி மகா வித். முதலிடம்

(சுதுமலை)

பூநகரி முளங்காவில் கொத்தணிப் பாடசாலைகளில் இருந்து ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் பூநகரி மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி மகேந்திரராசா சங்கீதா முதல்தர மாணவியாக சித்தியடைந்துள்ளார். (19)

## தீவுப்ப குதிக்கு யப்பான் உதவி

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கும், வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள மக்களுக்கும் குடிநீர் வழங்குவதற்காக யப்பான் தேசத்து செஞ்சிலுவைச் சங்கத்தினர் சுமார் ஏழு இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பவுசருடன் கூடிய உழவு இயந்திரமொன்றை, அன்பளிப்பாக யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்க கிளை மூலம் வழங்கியுள்ளனர். இதன் கையளிப்புவைபவம் எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெறும்.

இவ்வைபத்திற்கு தீவுப் பகுதி செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதியும் இளைப்பாறிய அதிபருமாகிய திரு. செ. வரதலிங்கம் தலைமை வகிப்பார். (15)

## மீண்டும் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பாலைதீவு உற்சவம் விமரிசையாக நடைபெற்றது. சுமார் ஐந்து வருடங்களுக்கு பின் நூற்றி இருபது படகுகளில் வந்த மக்கள் இத் திருப்பலிப் பூசைகளில் கலந்து கொண்டதாக அங்கு சென்று வந்த யாத்திரிகர்கள் தெரிவித்தனர்.

இரணைதீவு பங்குத் தந்தை அருட்திரு. ஜெயகுமார் தலைமையில் இத் திருப்பலி பூசை நேற்று காலை பத்துமணியளவில் நடைபெற்றதாகவும் இவ் யாத்திரிகர்கள் தெரிவித்தனர். (லோ)

## தேர்தல் நியமனம்

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான தேர்தலுக்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. பதினான்கு கிளைகளைக் கொண்ட இச்சங்கத்தில் பதின்மூன்று கிளைகளுக்கும் அங்கத்தவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர். ஒரு கிளைக்கு மட்டும் பலர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்துள்ளதால் இதற்கான தேர்தல் நடைபெறவுள்ளது. (15)

## சித்த மருந்துக்களின் தரம் குறைந்துள்ளது

(தீவுப்பகுதி)

உள்ளூராட்சி சபைகளினால் நடாத்தப்பட்டுவரும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுவரும் சித்தமருந்துகளின் தரம் குறைவாக உள்ளதாக அறிய வருகிறது. உள்ளூராட்சி திணைக்களம் சித்த மருந்துகள் தயாரிப்போரிடமிருந்து கேள்விப் பத்திரங்களைக் கோரும் போது குறைந்த கேள்விகளை வைப்போரிடமிருந்தே மருந்துகளைப் பெற்று வருகிறது. அவ்விநியோகத்தர்கள் குறைந்த கேள்வியால் தரமான மருந்துகளை தயாரிக்க முடியாது போய் விடுகிறது. உள்ளூராட்சி திணைக்களம் சித்த மருந்துகள் தயாரிப்

## மீண்டும் மில்லரின் படம்!

(புங்குடுதீவு)

1987 ஆம் ஆண்டு நெல்லியடி தாக்குதலின் போது வீரமரணமடைந்த 'கரும்புலி' கப்டன் மில்லரின் உருவப் படம் புங்குடுதீவு சந்தையடியில் மீண்டும் காட்சியளிக்கின்றது.

இவ் உருவப்படம் முன்னர் இதே இடத்தில் இருந்த போதிலும் இந்திய இராணுவத்தினரின் வருகைக்குப் பிறகு அப்புறப்படுத்தப்பட்டிருந்தது.

இப்போது மீண்டும் அது காட்சியளிக்கின்றது.

## பார்வையிடும் நேரம்

(யாழ்ப்பாணம்)

நோயாளரைப் பார்வையிடும் நேரம் தவிர வேறு நேரத்தில் யாழ். வைத்தியசாலைக்குள் நுழைந்து ஊழியர்களுக்கு வசதியீனங்களை உண்டாக்க வேண்டாம் என்று யாழ். வைத்தியசாலை நிர்வாக அதிகாரி கேட்டுள்ளார்.

ஆட்டோ, டச்சி ஓட்டுநர்கள், மக்கள் நோயாளரைப் பார்வையிடும் நேரங்களில் வைத்தியசாலைக்கு முன் தங்களுடைய வாகனங்களை நிறுத்திப் பெரும் இடைஞ்சலை உண்டு பண்ணுவதாகவும் அவ் அதிகாரி தெரிவித்தார். (வோ)

## விநாயகர் ஆலயத்தில் தேர்முட்டி

(சித்தங்கேணி)

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு புதிய சித்திரத் தேரும், தேர்முட்டியும் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. தேர்முட்டி வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று புதிய சித்திரத் தேரில் விநாயகர் ஆரோகணித்து வீதிவலம் வருவார். (23)


★ இளம் வாலிபர்களே நீங்கள் தினமும் அழகாய் இருக்க வேண்டுமா?
★ இளம் மங்கையர்களே! உங்களை யாவரும் பார்த்து ரசிக்க வேண்டுமா?
★ வயோதிபர்களே! உங்கள் மனைவிமார்கள் தினமும் உங்கள்மேல் அன்பு கொள்ள வேண்டுமா?

ஆம்

அதற்குக் கீழே உள்ள விலாசத்திற்கு தாமதியாது நாடுங்கள்

சிலிங்கோ சிகை அலங்காரம்

அச்சுவேலி

அச்சுவேலி நகரில் சிகை அலங்கார மன்னர்களாக விளங்கும் ஸ்தாபனம்

சிலிங்கோ

ஏழைகளின் நண்பன் (B- 159)



ஈழநாதமே!

காலை சேவல் கூவியதும்
எமது கடை வாசலில்
நீ வாசிப்பதற்கு கிடைப்பாய்

மக்கள் கடைமுன்பு நின்று, அடிபட்டு, உனது செய்திகளை படிப்பார்கள்
வாழ்க உன் பத்திரிகை
வளர்க உன் செய்திகள்

★★ கொலம்பியா ★★

(சிவன் கோவிலுக்கு அருகாமையில்)
ஆவரங்கால்
புத்தூர்

எம்மிடம் கட்டிடப் பொருட்களையும், பெயின்ற், இரும்பு வகைகளையும், உத்தரவாதத்துடன் பெறுவதற்கு மறவாதீர்கள்



ஈழநாதமே! அச்சுவேலி மக்கள் விரும்பிப்படிப்பது உன் பத்திரிகை தான்

★ அழகுப் பெண்களே நீங்கள் அழகாய் தெருவில் ஈஸ்ரன் துவிச்சக்கர வண்டிகளில் ஓடவேண்டுமா ?
★ மன்மத குஞ்சு ஆண்களே நீங்கள் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியில் முதலிடத்தை வகிக்கவேண்டுமா ?
★ ஐயாமார்களே சந்தைக்கு, வாழைக்குலைகள், மரக்கறிவகைகள் நீங்கள் எடுத்துச் செல்லவேண்டுமா ?

கவலையை விடுங்கள் நாடுங்கள்

தர்சினி எலெக்ரிக்கல்ஸ்

அச்சுவேலி

Dealears in Electrical goods & Paints appliances, S - Lon pipe Fittings Wiriing & Plumping & Contractors

Darshini Electricals

Bus Stand

வளர்க உன் செய்திகள்

# கொலம்பியா

(சிவன் கோவிலுக்கு அருகாமையில்)

ஆவரங்கால்

புத்தூர்

எம்மிடம் கட்டிடப் பொருட்களையும், பெயின்ற், இரும்பு வகைகளையும், உத்தரவாதத்துடன் பெறுவதற்கு மறவாதீர்கள்

கொலம்பியா

(B-162)

## தரம் குறைந்துள்ளது

(தீவுப்பகுதி)

உள்ளூராட்சி சபைகளினால் நடாத்தப்பட்டுவரும் இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளுக்கு உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்டுவரும் சித்தமருந்துகளின் தரம் குறைவாக உள்ளதாக அறிய வருகிறது. உள்ளூராட்சி திணைக்களம் சித்த மருந்துகள் தயாரிப்போரிடமிருந்து கேள்விப் பத்திரங்களைக் கோரும் போது குறைந்த கேள்விகளை வைப்போரிடமிருந்தே மருந்துகளைப் பெற்று வருகிறது. அவ்விநியோகத்தர்கள் குறைந்த கேள்வியால் தரமான மருந்துகளை தயாரிக்க முடியாது போய் விடுகிறது. உள்ளூராட்சி திணைக்களம் சித்த மருந்துகள் தயாரிப்போரிடமிருந்து கேள்விப் பத்திரங்களைக் கோரும் போது மருந்துகளின் தரநிர்ணயம் கவனிக்கப்படவேண்டும், (15)

★ மன்மத குஞ்சு ஆண்களே நீங்கள் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியில் முதலிடத்தை வகிக்கவேண்டுமா ?

★ ஐயாமார்களே சந்தைக்கு, வாழைக்குலைகள், மரக்கறிவகைகள் நீங்கள் எடுத்துச் செல்லவேண்டுமா ?

கவலையை விடுங்கள் நாடுங்கள்

# தர்சினி எலெக்ரிக்கல்ஸ்

அச்சுவேலி

Dealears in Electrical goods & Paints appliances, S - Lon pipe Fittings Wiriing & Plumping & Contractors

# Darshini Electricals

Bus Stand

ATCHUVELY

(B-163)

**றிக்கோ கோப்பியை** உங்கள் முன்னிலையில் அரைத்துப் பெற்றுக்கொள்ளலாம்

தரமான

* ஐஸ்கிறீம் வகைகள்
* பொம்பே சுவீற்ஸ்
* கேக்வகைகள்
* மட்டன்றோல்

விசேட ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்

பிறந்ததினம், திருமணம் ஆகிய வைபவங்களுக்கான றிக்கோ கேக் வகைகளை ஓடர் கொடுத்து 'ஐஸிங்' செய்து பெற்றுக்கொள்ளலாம்.

# றிக்கோ

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர்.

B.154

# அளவெட்டி, மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

எமது சங்கத்தின் எல்லாக் கிளைகளிலும் நுகர்ச்சிப் பொருள்கள் தரமானவையாகவும், மலிவாகவும் கிடைக்கும்.

* அளவெட்டியிலும், மல்லாகத்திலும் இயங்கும் களஞ்சியங்களில் மொத்த விலைக்கும் பொருள்கள் கிடைக்கும்.
* இரும்பு நிலையம், எரிபொருள் நிரப்பு நிலையம், விவசாயிகளின் பயிர்களுக்கேற்ற உர வகைகள், மருந்து வகைகள் என்பன அவ்வவற்றிற்குரிய நிலையங்களிற் பெறலாம்.
* பாடசாலை உணவு விநியோகப் பகுதி, மகளிர் குழு என்பனவும் சிறப்பாக இயங்குகின்றன.

பொது முகாமையாளர், அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்

(B- 155)

சிந்தனைக்கு

மையில் ஒருவன் களித்தாற்றால் பேதைகள்
கையென்று உடமை பெறின்

- திருவள்ளுவர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 05 - 03 - 90

## "நந்தவனத்திலோர் ஆண்டி"

" நந்தவனத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாசமாய்க் குயவனை வேண்டி
கொண்டுவந்தானொரு தோண்டி அதை
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி"

- இது சித்தர் பாடல்.

இதன் அர்த்தமும் தத்துவமும் வேறு; மிகப்பெரிது. (சித்தர் எம்மை இன்று மன்னிப்பாராக.)

1983 - ஆம் ஆண்டு இனக்கலவரம் மிகமோசமாக வெடித்தபோது முன்னர் போலல்லாது தமிழ் மண்ணிலேயே தமிழரைத் தொலைத்துக்கட்டி அடக்கிவிட வேண்டுமென்ற மனப்பான்மை சிங்கள அரசியல்வாதிகள் பலரிடமும் ஆயுதப்படையைச் சேர்ந்தவர்களிடமும் இருந்தது.

இதை முன்னரே மோப்பம் பிடித்திருந்த தமிழ் இளைஞர்கள் 'முதியவர்களின் சத்தியாக்கிரக சாத்வீகப் போராட்டம்' இனியும் செல்லாது என்பதைத் தெரிந்து ஆயுதம் ஏந்தி நின்றார்கள்.

பல்வேறு குழுக்களாகப் பிரிந்து அவர்கள் நின்றாலும் நோக்கம் ஒன்றாகவே அன்று இருந்தது.

அஞ்சா நெஞ்சுரத்துடன் அரசபடைகளை எதிர்த்து நின்றனர். பிள்ளைகளைப் பெற்ற பயனைக் கண்டு பெற்றோர் இறுமாப்படைந்தனர்,

ஆனால் இந்தப் பூரிப்பு நிலைத்து நிற்க முடியவில்லை. சில குழுக்கள் திசை மாறிச் செல்லத் தொடங்கின. சொகுசு வாழ்க்கையில் சிலர் அதிக நாட்டங்கொண்டனர்.

இதன் விளைவாக மக்களின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டன. இவர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையுமேற்பட்டது. இலட்சியத்தில் பற்றில்லாதவர்கள் ஆயுதம் ஏந்தி நின்றாலும் அஞ்சும் நெஞ்சினராகினர்.

மக்களின் ஆதரவை இழந்து விரோதத்தைத் தேடிக் கொண்டவர் சொந்த மண்ணிலேயே தாக்குப் பிடிக்க முடியாமல் ஓடித்தப்பினர்.

1987 - ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'ஈழத்தமிழ் மக்களுக்காக' அவர்களின் சம்மதமின்றியே ராஜீவ்

# "தமிழர்களின் நியாயமான விருப்பங்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவே தமிழீழம்"

## -பிரேமதசா

ஸ்ரீலங்காவைச் சூழ்ந்திருந்த ஐயப்பாடு என்ற மேகம் முற்றாகக் கலைந்து திசை மாறிச் செல்லவில்லை. கடந்த ஏழு வருடங்களில் நிகழ்ந்த துரதிருஷ்டங்களைப்பற்றி அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் கூடிக் கர்ண கொடூரமாகப் பேசுகிறார்கள்.

இது இப்படியிருக்க. மிகவும் பாதிப்புக் குள்ளான இலங்கைத் தீவில் இப்பொழுது நம்பிக்கை என்னும்தென்றல் வீசுகிறது. ஹொட்டல் ஓய்வறைகளிலும், பொதுச் சந்தைகளிலும், அதிகாரம் என்னும்தாழ்வாரத்தில் ஒதுங்கியிருப்பவர்களும் கெட்ட காலம் முடிந்து, காலம்மாறி 1990.இல் சமாதானம் வரப் போகிறது என்று பேசுகிறார்கள். கவிஞரும் நாவலாசிரியரும், சாமான்யரான ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ சமாதானத்தில் மிக நம்பிக்கைகொண்ட மனிதராகும் எனக் கருதுகின்றார்கள். ஏழு மாதங்களுக்கு முன்பு நான் சந்தித்த ஜனாதிபதி ஒரு போரில் அடியுண்ட மனிதரைப்போல் காணப்பட்டார். நாடு முழுவதும் தலை விரித்தாடிய வன்செயல்கள் இந்தியப் படை ஜூலை 1989-க்கு முன் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கையால், இந்தியாவுடனான இழுபறி ஆகியன நாட்டைச் சூழ்ந்து வட்டமிட்டவண்ணமிருந்தன.

ஜனதா விமுக்திப்பெரமுனைப் (ஜே. வி. பி.) போராளிகள் நாட்டைப் பரிபாலித்து வந்தனர். ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அணியினர் பயப்பிராந்தி பிடித்த நிலையில் காணப்பட்டனர்.

பிரேமதாஸா நிலைமையை இப்பொழுது மாற்றி அமைத்து விட்டார் போல் தெரிகிறது. ஜே வி.பித் தலைவர்கள் பலர் அழித்தொழிக்கப் பட்டு விட்டார்கள். சிலர் வகையாக மாட்டிக் கொண்டு சிறைவாசம் அனுபவிக்கின்றனர். விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இன்று நல்லுறவு நிகழ்கின்றது. இவர்கள் மிக விரைவில் வடக்கையும் - கிழக்கையும் தமது அதிகாரத்துக்குள் கொண்டு வர

தலைவர்களைப் பிடிக்க தகவல் வழங்கிய ஜே. வி. பியினருடன் பாதுகாப்புப் படையினர் அன்புடன் நடந்துகொள்கிறார்கள், அவர்கள் எங்களுடைய மக்கள். அவர்களை நாங்கள்தான் பலாத்காரத்துக்கும் கிளர்ச்சிக்கும் தள்ளினோம். அவர்களை நாம் தான் ஜனநாயக நீரோட்டத்துக்கு திருப்ப வேண்டும் என்றார். அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையில் சமாதானத்தை நிலை நாட்ட இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கைக்கு வந்தனர். சமாதான முயற்சி தோல்வியில் முடிந்தது. நாம் புலிகளுடன் இப்போது இணக்கம் கண்டு விட்டோம். நாம் அப்படி ஏன் செய்ய வேண்டும்? தமிழரும் எமது மக்கள் தான். தமிழரும் சிங்களவரும் சமாதானமாகவும், சௌஜன்யமாகவும் இலங்கையில் வாழவேண்டும். இலங்கை எம் எல்லோருடையவும் அன்னை பூமி. எங்களுடைய மக்களுடன் நாம் சமாதானம் செய்து கொள்வதைத் தடுப்பது யார்?'' இவ்வாறு பிரேமதாசா கூறினார்.

இந்தியப் படை விலகியதும் யாழ்ப்பாணத்தில் இரத்தம் சிந்துவதற்கு இடமில்லை என்கிறார் பிரேமதாசா வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எட்டு மாவட்டங்களில் ஆறு மாவட்டங்களிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறி விட்டது. அங்கு இரத்தம் சிந்தியதா? விடுதலைப் புலிகள் அமைதியாக இந்திய இராணுவம் வெளியேறிய பகுதிகளில் பொறுப்பை ஏற்றுள்ளார்கள். யாழ்ப்பாணத்திலும் அப்படித்தான். ஈ.பி. ஆர். எல். எவ். தலைவர்கள் இந்தியாவுக்கு ஓடுவார்கள் அல்லது கொழும்புக்கு வருவார்கள். அவ்வளவுதான்! இப்படி பிரேமதாசா கூறுகிறார்.

### இலங்கை இராணுவம் புலிகளை அழித்து விடுமா?

'' இலங்கைப் பாதுகாப்புப் படையினர் புலிகளைச் சுற்றி வளைத்துப் பிடித்து அவர்கள் கதையை முடித்து விடுமா? என்றேன். இல்லை

இணைப்புத் தொடர்பாக மக்களிடம் ஒப்பம் கேட்கப்படும் ஒப்பம் கேட்டல் ஏப்பிரலில் இடம்பெறாது. அது ஜூன் மாதத்திற்கும் பின்போடப் பட்டுள்ளது.

''தலைவர்கள் அழிக்கப் பட்டபின் ஜே. வி. பி அணியினரும் ஆதரவாளரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் எதிர் பார்க்கிறீர்கள்?

''ஜனநாயக நீரோட்டத்துடன் இவர்களை நாம் சேர்த்துக் கொள்ளவேண்டும் அவர்கள் எமது சமூகத்தில் சிறந்தவர்கள் எமது மக்கள்'' என்றார் பிரேமதாசா.

### பட்டமும் பரம்பரையும்

பட்டத்துக்கும் பாம்பரைக்கும் முக்கியத்துவம் வழங்காத பிரேமதாசா தனக்கு மூன்று முக்கிய இலக்குள் இருப்பதாகக் கூறினார். அவையாவன. ★ சிறுபான்மையினர் பிரச்சினையை நேர்மையாகவும் நியாயமாகவும் அணுகுதல். தவறிப்போன இளைஞர்களை வென்றெடுப்பது. ★ பாரிய வறுமையொழிப்புத் திட்டம்.

(தொடரும்)

## எமது குறை தீராதா ?

### மக்கள் மடல்

ஆசிரியர் ஈழநாதம்,

இன்றைய காலகட்டத்தில் எமது பிரதேசத்தில் தொழிற் கல்வியின் அவசியம் வலியுறுத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இன்று வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பல அரச, தனியார் தொழிற் கல்வி நிலையங்கள் உள்ளன. அதிலும் அரச தொழிற் கல்வி நிலையங்களில் பயிற்சி பெற்றுப் பெறப்படும் சான்றிதழுக்கான மதிப்பு, தனியார் நிறுவனங்கள் வழங்கும் சான்றிதழ்களுக்கு இல்லை.

இதனால் தகுதியான சான்றிதழ்களைப் பெறும் நோக்குடன் பல இளைஞர், யுவதிகள் அரச தொழிற்கல்வி நிலையங்களை நாடிக் கொண்டு இருக்கின்றனர். இவ் வேளையில் இந் நிறுவனங்கள் சில அவற்றின் அதிபர்களினால் இஷ்ரப்படி செயற்படுத்தப்பட்டுவருகின்றது.

எமது கிளிநொச்சிப் பிரதேசம் ஒரு விவசாயப் பிரதேசம் இங்கு விவசாயப் பயிற்சியைப் பெற விரும்புவர்களின் எண்ணிக்கையும் அதிகம். வட மாகாணத்தில் திருநெல்வேலி, வட்டக்கச்சி ஆகிய இரண்டு அரச விவசாயப் போதனா நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று இளைஞர்களுக்கும், மற்றையது யுவதிகட்கும் பயிற்சி அளித்துச் சான்றிதழ்களும் கொடுத்துவந்தன,

ஆனால் இன்று இரண்டு நிலையங்களும் பெண்களுக்கே பயிற்சி அளித்து வருகின்றன. முன்பு இருந்ததைப்போல ஒன்று ஆண்களுக்கும். ஒன்று பெண்களுக்கும் பயிற்சிகளை அளித்தால் வரவேற்கக்கூடியதாக இருக்கும் ஆனால் இவ் விடையத்தை அதிகாரிகளுக்கு வலியுறுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

கிளிநொச்சிப் பகுதியில் பல இளைஞர் இன்று படித்து விட்டு வேலையற்று இருக்கின்றனர். இவ் இளைஞருள் நானும் ஒருவன் என்றவகையில் இக் கடிதத்தை எழுதுகிறேன். இளைஞராகிய எமது இக் குறையை உங்கள் பத்திரிகையின் வாயிலாக வெளிப்படுத்தி நடவடிக்கை எடுக்க முடியுமென எண்ணுகிறேன்.

இப்படிக்கு
இரா. முருகவேள்
வட்டக்கச்சி.

## யாழ். பல்கலைக்கழகம் ஓடுகாலிளிகன்கூடாரமாகிறதா?

ஆசிரியர்
''ஈழநாதம்''
ஐயா'

பல்கலைக்கழக சீர்கேடான ராக்கிங் ஆல் வருடாந்தம் மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. அவ்வரிசையில் இவ்வருடம் நானும் சேர்க்கப்பட்டுள்ளேன். இப்பிரச்சினை பற்றி முன்னரே நான் அறிந்திருந்த

வளாகத்தின் ஒதுக்குப்புறமான இடத்துக்கு என்னைப் பலவந்தமாக அழைத்துச் செல்ல முற்பட்ட போது இராணுவமுகாம் ஒன்றில் இருந்து தப்பும் சிறைக்கைதி போன்று தப்பிவர வேண்டியதாயிற்று. ஆனால் வளாக பிரதான நுழைவாயிலில் வைத்து என்னை மீண்டும் பிடித்த அவர்கள் வளாகமுன்

## ஊர்சுற்றி எழுதுவது

டாக்டர் செ. சிவஞான சுந்தரம் என்றால் பலருக்கும் தெரியாது. ஆனால் டாக்டர் நந்தி என்று சொன்னால் எல்லோருக்குமே தெரியும். கடுமையான சுகயீன முற்றுப் பெறும் சத்திரசிகிச்சைக்காக இங்கிலாந்து சென்றிருக்கிறார்.

டாக்டர் நந்தி பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். இம்மாதம் ஆறாம் தேதி ''நம்பிக்கைகள்'' என்ற அவரது நாவல் இங்கு வெளியிடப் படுகிறது.

1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முப்பதாம் தேதி நல்லூரில் பிறந்த டாக்டர் நந்தி யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துவப் பீடத்தில் தற்காலிகமாகத் துணைவேந்தராகவும் சில காலம் பதவி வகித்தவர்.

டாக்டர் நந்தி புகழ்

நின்றாலும் நோக்கம் ஒன்றாகவே அன்று இருந்தது.

அஞ்சா நெஞ்சுரத்துடன் அரசபடைகளை எதிர்த்து நின்றனர். பிள்ளைகளைப் பெற்ற பயனைக் கண்டு பெற்றோர் இறுமாப்படைந்தனர்,

ஆனால் இந்தப் பூரிப்பு நிலைத்து நிற்க முடியவில்லை. சில குழுக்கள் திசை மாறிச் செல்லத் தொடங்கின. சொகுசு வாழ்க்கையில் சிலர் அதிக நாட்டங்கொண்டனர்.

இதன் விளைவாக மக்களின் விரோதத்தையும் சம்பாதித்துக் கொண்டன. இவர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையுமேற்பட்டது. இலட்சியத்தில் பற்றில்லாதவர்கள் ஆயுதம் ஏந்தி நின்றாலும் அஞ்சும் நெஞ்சினராகினர்.

மக்களின் ஆதரவை இழந்து விரோதத்தைத் தேடிக் கொண்டவர் சொந்த மண்ணிலேயே தாக்குப் பிடிக்க முடியாமல் ஓடித்தப்பினர்.

1987 - ஆம் ஆண்டு ஜூலை மாதம் 'ஈழத்தமிழ் மக்களுக்காக' அவர்களின் சம்மதமின்றியே ராஜீவ் காந்தியும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவும் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டனர்.

இதன் பயனாக இந்திய இராணுவம் 'அமைதிப்படை' என்ற பெயரில் ஈழத்துக்கு வந்தது.

ஆயுதங்களையும் இழந்து ஓடித்தப்பி ஒழிந்திருந்தவர்கள் "அமைதிப்படை"யின் பாதுகாப்புடன் மீண்டும் ஆயுதம் ஏந்தி சொந்த மண்ணுக்கு மீண்டனர்,

சொந்தப் புத்தியை இழந்து இரவல் புத்தியுடன் செயல்படத் தொடங்கிய இவர்கள் கூட்டுச் சேர்ந்து வடக்கு கிழக்கு மாகாணசபையின் ஆட்சி அதிகாரத்தையும் பெற்றனர். தமிழ் மக்களின் பேரபிமானத்தை ஒரு காலத்தில் பெற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் இரவல் புத்தியினால் கூடா நட்புக் கொண்டு 'தந்நாமமும் கெட்டது' கூட்டணியின் பெயரில் ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ். பாராளுமன்றத்தில் சில இடங்களைத் தேடிக்கொண்டன.

மாகாணசபை ஆட்சியையும் பாராளுமன்றத்தில் சில இடங்களையும் தேடிக்கொண்டவர்கள் இந்திய இராணுவம் இங்கேயே நிரந்தரமாக நிற்கும் என்ற நினைப்பில் தலை கால் புரியாமல் துள்ளிக் குதித்தனர்.

இந்தியப்படை இங்கிருந்து விலகிச் செல்லத் தொடங்கியதும் அவர்களோடு பின் சென்றவர்களில் சிலர் போகிற போக்கில் "வெந்த வீட்டில் பிடுங்கியது அறுதி" என்பதுபோல தறுதலைத்தனமாகக் கொலை கொள்ளைகளில் இறங்கி மக்களின் வெறுப்பையும் சாபத்தையும் தேடிக்கொண்டனர்.

இவை போதாதென்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி எடுத்த நல்ல முயற்சிகளைக் கெடுப்பதற்கு சாத்தியமற்ற பத்தொன்பது யோசனைகளை முன்வைத்துக் குட்டிச் சுவராக்கியது ஈ. பி. ஆர். எல். எவ்.

எல்லாவற்றுக்கும் உச்சக் கட்டமாக "ஒரு வருடகால அவகாசம்" கொடுத்து "ஈழ ஜனநாயக குடியரசை"ப் பிரகடனம் செய்து மாகாண சபையை "அரசியல் நிர்ணய சபையாக" மாற்றுவதென்று தீர்மானம் நிறைவேற்றி தமிழ் மக்களைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியிருக்கிறது.

ஈ. பி, ஆர். எல். எவ். வின் சகாக்கள்கூட இப்போது தமிழ் நாட்டில் தங்கியிருக்க முடியாத அவலம்.

சித்தர் பாடல் இவர்களுக்கு வெகு பொருத்தம்!

---

யால், இந்தியாவுடனான இழுபறி ஆகியன நாட்டைச் சூழ்ந்து வட்டமிட்டவண்ணமிருந்தன.

ஜனதா விமுக்திப்பெரமுனைப் (ஜே. வி. பி.) போராளிகள் நாட்டைப் பரிபாலித்து வந்தனர். ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அணியினர் பயப்பிராந்தி பிடித்த நிலையில் காணப்பட்டனர்.

பிரேமதாஸா நிலைமையை இப்பொழுது மாற்றி அமைத்து விட்டார் போல் தெரிகிறது. ஜே வி.பித் தலைவர்கள் பலர் அழித்தொழிக்கப் பட்டு விட்டார்கள். சிலர் வகையாக மாட்டிக் கொண்டு சிறைவாசம் அனுபவிக்கின்றனர். விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இன்று நல்லுறவு நிகழ்கின்றது. இவர்கள் மிக விரைவில் வடக்கையும் - கிழக்கையும் தமது அதிகாரத்துக்குள் கொண்டு வரவுள்ளனர். 1989 ஜூலை மாதத்தில் 45.000 மாக இருந்த இந்திய இராணுவம் இன்று 20,000 மாகக் குறைந்துள்ளது. மார்ச் 30 ஆம் திகதியுடன் இந்திய இராணுவம் சம்பூரணமாக இலங்கையை விட்டு வெளியேறிவிடும்.

மூன்று வருட நீண்ட தூக்கத்துக்குப் பிறகு எல்லாப் பல்கலைக் கழகங்களும் திறக்கப்பட்டுள்ளன. வேலை நிறுத்தங்கள் இப்பொழுது இலங்கைத் தீவை முடங்க வைப்பதில்லை. ஸ்கன்டிநேவியாவிலும், ஜெர்மனியிலுமிருந்து உல்லாசப் பிரயாணிகள் மாணிக்கத்தீவுக்கு மறுபடியும் வரஆரம்பித்து விட்டார்கள் அமெரிக்கர்களும் வருகிறார்கள்.

உதவி வழங்கும் நாடுகள் முன்பிருந்த அந்நியச் செலவாணி நெருக்கடியைத்தளர்த்தும் வகையில் 87 லட்சம் ஸ்ரேலிங் பவுண் முதற்கட்ட உதவியாக இலங்கைக்கு வழங்கியுள்ளன.

பங்குச் சந்தையில் நம்பிக்கை திரும்பவும் ஏற்பட்டுள்ளது. தென்கொரியா, அரசாங்க உடைமையான துல்கிரியாத் துணி ஆலையை இப்போது தான் வாங்கியுள்ளது. இலங்கை ஒரு தேசிய அரசாக மிளிரக் கூடும் என்பதில் சர்வதேச வியாபாரச் சமூகம் நம்பிக்கை வைத்திருப்பதை இது காட்டுகிறது. கொழும்பில் வேறிரு இந்தியப் புத்திஜீவிகளுடன் நான் பிரேமதாஸாசவைச் சந்தித்த சமயம், "எல்லோரையும் அணைத்து நடக்க வேண்டும் என்ற எமது கொள்கை தான் இதற்கெல்லாம் காரணம்" என்று முகமலர்ச்சியுடன் பிரேமதாஸா கூறினார். தமது மனிதநேய அடிப்படையிலான அணுகு முறை தான் இந்த மாற்றங்களுக்கெல்லாம் காரணம் என்கிறார் பிரேமதாஸா. மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், தமது வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எட்டு மாவட்டங்களில் ஆறு மாவட்டங்களிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறி விட்டது. அங்கு இரத்தம் சிந்தியதா? விடுதலைப் புலிகள் அமைதியாக இந்திய இராணுவம் வெளியேறிய பகுதிகளில் பொறுப்பை ஏற்றுள்ளார்கள். யாழ்ப்பாணத்திலும் அப்படித்தான். ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர்கள் இந்தியாவுக்கு ஓடுவார்கள் அல்லது கொழும்புக்கு வருவார்கள். அவ்வளவுதான்! இப்படி பிரேமதாசா கூறுகிறார்.

## இலங்கை இராணுவம் புலிகளை அழித்து விடுமா?

"இலங்கைப் பாதுகாப்புப் படையினர் புலிகளைச் சுற்றி வளைத்துப் பிடித்து அவர்கள் கதையை முடித்து விடுமா? என்றேன். இல்லை என்று உறுமினார் பிரேமதாசா 10,000 இலங்கை இராணுவத்தினர் ஒரு சுதந்திர பூமியில் நிலை கொண்டுள்ளனர் என்று அவர்முன் வைத்த கருத்தை பிரேமதாசா தட்டிக் கழித்தார்.

தனது வேலை முடிந்ததும் இலங்கை இராணுவம் முகாமுக்குத் திருப்பி விடும். ஆயுதங்களை கையளிக்க வேண்டிய வேளை வந்ததும் புலிகளும் ஆயுதத்தை கையளிப்பார்கள். எமக்கிடையில் உள்ள பிரச்சினைகளை நாம் தீர்த்துக் கொள்வோம். இரு பகுதியினரும் புரிந்துணர்வுடன் நடந்தால், ஒருசாரரில் மற்றவர் நம்பிக்கை கொண்டிருந்தால் எமக்கிடையில் உள்ள வித்தியாசங்களை நாமே தீர்த்துக் கொள்ளலாம் - என்கிறார் பிரேமதாசா.

"திடீரென்று ஏற்பட்ட இந்தப் புரிந்துணர்வில் ஏதோ மாயை இருப்பது போல் தெரிகிறது?" விடுதலைப் புலிகள் தமது ஈழம் கோரிக்கையை கைநழுவ விட்டுவிட்டார்களா? அல்லது சிங்களவர் தமிழருக்கான சுயாட்சிப் பிரதேசத்தைக் கொடுக்கச் சம்மதிப்பார்களா? இந்திய இராணுவம் வெளியேறிய பிறகு அதிகாரப் பரவலாக்கம் இடம் பெறுமா? - இக் கேள்விகளுக்கு பிரேமதாசா தீர்கமானமாகப் பதிலளித்தார்.

நேரகாலத்தில் நாம் தமிழர்களுடைய நியாயபூர்வமான விருப்பங்களை அறிந்து அவர்களைத் தழுவி நடக்காததன் விளைவு தான் தமிழ் ஈழம் அதிகாரப் பரவலாக்கத்தில் மாற்றம் எதுவும் இல்லை.

ஜனாதிபதியின் கட்டளையின் பிரகாரம் வடக்கையும் கிழக்கையும் இணைப்பதற்கில்லை. இந்தியாவும் ஸ்ரீலங்காவும் இணங்கிக் கொண்ட தற்கமைய வடக்கு கிழக்கு

---

டுத்தப்பட்டுவருகின்றது.

எமது கிளிநொச்சிப் பிரதேசம் ஒரு விவசாயப் பிரதேசம் இங்கு விவசாயப் பயிற்சியைப் பெற விரும்புவர்களின் எண்ணிக்கையும் அதிகம். வட மாகாணத்தில் படுத்தி நடவடிக்கை எடுக்க முடியுமென எண்ணுகிறேன்.

இப்படிக்கு
இரா. முருகவேள்
வட்டக்கச்சி.

---

# யாழ். பல்கலைக்கழகம் ஒடுகாலிளிகன்கூடாரமாகிறதா?

ஆசிரியர்
"ஈழநாதம்"
ஐயா'

பல்கலைக்கழக சீர்கேடான ராக்கிங் ஆல் வருடாந்தம் மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. அவ்வரிசையில் இவ்வருடம் நானும் சேர்க்கப்பட்டுள்ளேன். இப்பிரச்சினை பற்றி முன்னரே நான் அறிந்திருந்த போதும் அச்சம்பவத்துக்குப் பின் நான் ராக்கிங்பற்றி இதுவரை அறிந்திருந்தது பூச்சியமே என்பது தெளிவாகியது. பல்கலைக்கழக வாழ்வு பற்றிய எனது பிரமைகள் யாவும் உடைந்து போயின. கல்விக்கும், மனிதப் பண்புக்கும் எதுவித தொடர்பும் கிடையாது என்பது உண்மையோ என் ஐயுறுகிறேன்.

28- 02- 90 அன்று பதிவுக்காக பல்கலைக்கழகம் சென்ற போது அந்நிய இராணுவம் ஒன்றிடம் அகபபட்டுக் கொண்டது போன்ற உணர்வே எனக்கேற்பட்டது. இதை இம்முறை தெரிவாகியுள்ள புதிய மாணவர்களில் உணர்வுள்ள அனைவரும் உணர்ந்திருப்பர் என்பது நிச்சயம்.

"எங்கடா வந்தனியள்" இதுவே வளாக வாயிலில் வைத்து எனக்கும் என்னுடன் வந்த ஏனைய மாணவர்களுக்கும் எமது மூத்த மாணவர்களால் (Seniors) தரப்பட்ட வரவேற்பு. பதிவு முடிந்த பின் என்னை ராக்கிங்குக்காக அழைத்துச் சென்று தமிழில் உள்ள அனைத்து தூஷண வார்த்தைகளாலும் அர்ச்சித்தனர். என்னுடன் ஓரளவு இங்கிதமாசக் கதைத்தவர்களை கூடநின்ற ஏனையவர்கள் அதே வார்த்தைகளால் திட்டினர்.

"நான் இனி வரும் வருடங்களில் ராக்கிங் செய்யப் போவதில்லை, இம்முறை நான் அதற்கு உட்படவும் விரும்பவில்லை" எனக்கூற "நீ வரும் வருடங்களில் செய்வது விடுவது பற்றி எமக்கு கவலையில்லை. ஆனால் நீ நாம் சொல்பவற்றை செய்யாது இங்கிருந்து வெளியே செல்வதைப் பார்ப்போம்" என பயமுறுத்தினர். அவர்கள் ராக்கிங் என்ற பெயரில் செய்யச் சொல்பவற்றை எழுத எனது பேனா மறுக்கிறது.

வளாகத்தின் ஒதுக்குப்புறமான இடத்துக்கு என்னைப் பலவந்தமாக அழைத்துச் செல்ல முற்பட்டபோது இராணுவமுகாம் ஒன்றில் இருந்து தப்பும் சிறைக்கைதி போன்று தப்பிவர வேண்டியதாயிற்று. ஆனால் வளாக பிரதான நுழைவாயிலில் வைத்து என்னை மீண்டும் பிடித்த அவர்கள் வளாகமுன் வீதியில் வைத்து காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர். வளாக காப்பாளர்களால், தெருவில் நின்றவர்களைப்போல் வேடிக்கை பார்ப்பதைவிட வேறு ஒன்றும் முடியவில்லை. இது சம்பந்தமாக பெரிதும் மனம் உடைந்திருந்த என்னை அன்று பிற்பகல் தெருவில் சந்தித்த மூத்த மாணவர் ஒருவர் "எம்மால் எதுவும் செய்ய முடியும் நீ எங்களுக்கு ஒடேய் (கீழ்ப்படியாவிடின) பண்ணாவிடின் இங்கு உனது உயர் கல்வியைத் தொடர முடியாது" என எச்சரித்தார்.

இச்சம்பவங்கள் பல்கலைக்கழக மாணவர்கள் ஒரு சிலராலேயே மேற்கொள்ளப்பட்டது எனினும் இவற்றுக்கு எதிராக பல்கலைக்கழகத்துக்குள் குரல் கொடுக்க எவரும் இல்லாமலோ அல்லது குரல் கொடுக்க முடியாது இருந்ததாலோ நான் பல்கலைக்கழக மாணவர்களே இங்ஙனம் தான் என்ற முடிவுக்கு வருவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

இதுவரை பல்கலைக்கழக நிர்வாகமோ, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமோ இது பற்றி மௌனமாக இருப்பது பெரும் விசனத்திற்குரியதாக இருக்கின்றது. பொதுமக்களும் இதற்கெதிராக குரல் கொடுக்க முன்வர வேண்டும். கடந்த காலங்களில் அனுபவித்தல் போன்ற இக்கஷ்டங்களை இக்கல்வி வாய்ப்புக்காக சகித்துக் கொண்டு இருப்பது சரியா என மனங்குழம்புகிறேன். இக்கடிதத்தைப் பிரசுரிப்பதன் மூலம் கேள்விக் குறியாக இருக்கும் எனது உயர்கல்விக்கு விடைகாண உதவுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

- ஆதவன்
நல்லூர்.

---

சொன்னால் எல்லோருக்குமே தெரியும். கடுமையான சுகயீன முற்றுப் பெரும் சத்திரசிகிச்சைக்காக இங்கிலாந்து சென்றிருக்கிறார்.

டாக்டர் நந்தி பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிறார். இம்மாதம் ஆறாம் தேதி "நம்பிக்கைகள்" என்ற அவரது நாவல் இங்கு வெளியிடப்படுகிறது.

1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முப்பதாம் தேதி நல்லூரில் பிறந்த டாக்டர் நந்தி யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவத்துவப் பீடத்தில் தற்காலிகமாகத் துணைவேந்தராகவும் சில காலம் பதவி வகித்தவர்.

டாக்டர் நந்தி புகழ் பெற்ற எழுத்தாளர். 1947 ஆம் ஆண்டில் "சஞ்சலமும் சந்தோஷமும்" என்ற அவரது முதல் சிறுகதை வீரகேசரியில் வெளிவந்தது. இதுவரை எழுபத்தைந்து சிறுகதைகள் எழுதியிருக்கிறார். கண்களுக்கு அப்பால், மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, ஊர்நம்புமா என்ற சிறுகதைத் தொகுதிகளை நிறைய வெளியிட்டிருக்கிறார்.

குரங்குகள் என்ற நாடகமும் எழுதியிருக்கிறார். அருமைத்தங்கைக்கு, அன்புள்ள நந்தினி, உங்களைப் பற்றி என்ற மருத்துவ ஆலோசனை நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார்.

எழுத்தாளர்களுடன் நெருங்கிய தொடர்புவைத்திருக்கும் டாக்டர் நந்தி சிறந்த சிந்தனையாளர், எளிமையானவர், சமத்துவ நோக்குடையவர்.

★ ★ ★

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைப் பார்த்து யாழ்ப்பாண மக்கள் மட்டுமல்ல ஈழத்தமிழ் மக்களே பெருமையடைகிறார்கள். சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தையும் இது மிஞ்சிவிட்டதென்றும் சிலர் சொல்வதுண்டு.

ஆனால் அங்குசில மாணவர்கள் நடந்து கொள்ளும் முறைதான் தமிழருக்குத் தலைக்குனிவை ஏற்படுத்துகிறது.

# ஈழநாதம்

# ஈழத்தை அங்கீகரிக்கும்படி பல நாடுகளை கோரியுள்ளோம் - பெருமாள்

(திருகோணமலை)

ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக கடந்த வியாழக்கிழமை பிரகடனப்படுத்தப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதல்வர் அ. வரதராஜப் பெருமாள் இந்தியப் படை இலங்கையை விட்டு வெளியேறிய பிறகும் தமது போராட்டம் தொடரும் என்றார்.

சுதந்திர சுயாட்சி உரிமை பெற்ற ஈழ ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப்படுத்தியதற்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் தொடர்பில்லை என்றும், இந்தியப் படை போனாலும் நாம் இங்கிருந்து தொடர்ந்து போராடுவோம் என்றார் முதலமைச்சர் வரதர்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் இலங்கை அரசாங்கத்துக்குக் கடைசிச் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளோம். ஒரு வருடத்துக்கிடையில் ஈ.பி ஆர்.எல்.எவ். முன்வைத்த 19 அம்சக் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுச் செயற்படுத்தாவிடின் நாம் இலங்கை அரசுடன் உள்ள சகல தொடர்புகளையும் துண்டித்து விடுவோம் என்றார்.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை இப்போதுநடாத்த வேண்டிய அவசியமில்லை என்றும், 19 அம்சக் கோரிக்கைகளைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு,கோரிக்கைகள் தொடர்பாக விளக்கம் கேட்கும் பட்சத்தில் தாம் பேச்சுவார்த்தைக்குத்தயார்என்றும் தெரிவித்தார்.

ஏதாவது நாடு உங்கள் சுதந்திரப் பிரகடனத்தை ஆதரித்துள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்,நாம் பல நாடுகளை எம்மை அங்கீகரிக்கும்படிகோரியுள்ளோம். அவர்களிடம் பதிலை எதிர்பார்க்கிறோம் என்றார்.

எமது 19 அம்சக் கோரிக்கையை ஆதரிக்காதுபோனால் ஒரு வருடத்துக்குப் பிறகு பாதுகாப்புப் படையையும், பொலிசையும் அந்நியப் படைகள் எனப் பிரகடனப் படுத்த உள்ளோம்.

எம்மைப் பொறுத்த வரையில் வடக்கு-கிழக்கு மாகாண சபை என்று ஒன்று இப்போது இல்லை. மாகாண சபை இப்போது ஈழ ஜனநாயகக் குடியரசின் தேசிய அரசுப் பேரவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இல்லாத ஒன்றை எப்படி ஜனாதிபதியால் கலைக்க முடியும் என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முதலமைச்சர் வரதர் கூறினார்.

மேற்கூறிய இத்தகவல்களை முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் ஞாயிறு வீக் என்ட் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

---

அனைத்துக் கட்சிக் கூட்டம்

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்

(சென்னை)

அனைத்துக் கட்சிக் கூட்டம் மிக விரைவில் கூட்டப்பட வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சி வலியுறுத்தியுள்ளது. இக்கூட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சனைகள் பற்றி அனைத்துக் கட்சிகளும் விவாதிக்கவுள்ளன.

இக்கூட்டத்திற்கான வேண்டுகோளை தமிழ்நாடு இந்திய கம்யூனிஸ்ட் தமிழ் மாநிலச் செயற்குழுவின் செயலாளர் திரு. ரத்தினசிவம் விடுத்துள்ளார். இதே வேளையில் கடந்த ஒரு மாதங்களாக அனைத்து தமிழ்க் கட்சிகளும் தனித் தனியாக தமிழக முதலமைச்சர் திரு. கருணாநிதியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தி, அப்பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## ஓவர்ரைம் இல்லை

(கோண்டாவில்)

இதுவரை காலமும் ரயில்வே பகுதி ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டு வந்த மேலதிக நேரத்துக்கான சம்பளம் யாவும் இம் மாதத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் குறிப்பாக ரயில்வே கடவை பாதுகாவலர்கள் நாளாந்தம் பன்னிரெண்டு மணித்தியால வேலை செய்து வந்ததுடன், நாளாந்தம் நான்கு மணித்தியாலத்திற்கான மேலதிக சம்பளத்தினையும் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் இந்த மேலதிக நேர சம்பளம் திடீர் நிறுத்தமானது யாழ். குடாநாட்டிற்கு மாத்திரமா? அல்லது முழு நாட்டிற்குமானதா என்பதை புரிந்துகொள்ள முடியாத நிலையில் ரயில்வே பகுதி ஊழியர்கள் அனைவரும் அங்கலாய்க்கின்றனர். (34)

---

## வடிகால் துர்நாற்றம் நோய் பரவும் ஆபத்து

(விசேட நிருபர்)

குருநகர் பகுதி வடிகால்களில் கழிவு நீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசி வருகிறது. இதன் காரணமாக நுளம்பு போன்ற தொற்று நோய்க் கிருமிகள் அதிகரிப்பதால் பொதுமக்கள்நோய்வாய்ப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வடிகால்கள் பழுதடைந்து போயுள்ளதாலும், வடிகால்களில் எல்லை வைத்து கற்கள், வலைக் கம்பிகளால் குடியிருப்பாளர் அடைத்து விடுவதாலும் இந்நிலைமை எழுந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

யாழ்-மாநகர சபை சுகாதாரப் பகுதியினரும், பொது அமைப்புக்களும் இச்சீர்கேட்டில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்படுபவர்கள் நமது நிருபரிடம் தெரிவித்தனர். (21)

---

## தலைவர் பதவி இராஜினாமா

(சென்னை)

இந்தியப் பிரதமர் வி, பி. சிங் ஜனதாக்கட்சித் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். இதற்குக் காரணம் ஒரே நேரத்தில் ஒருவர் இரு பதவிகளில் அங்கம் வகிக்க முடியாமையாகும்.

---

## ஆட்டின் பிறப்பை அறிய வந்த "ஈழப் போராளிகள்"

(சென்னை)

தமிழகத்தின் பல பகுதிகளில் தங்கியுள்ள போராளிகளை நேரடியாக விசாரிக்கச் செல்லும் புலனாய்வுத்துறையினர் படாதபாடுபடுகின்றனர். ராமேஸ்வரத்திலும், மண்டபம் முகாமிலும் தங்கியுள்ள தமிழ்ப் போராளிகளைக் சந்திக்க அவ்வப்போது ரகசியப் பொலிஸார் செல்கின்றனர்.

மேற்படி ரகசியப் பொலிஸார் கேட்கும் கேள்விகளுக்கு கிண்டலாகப் பதிலளிக்கின்றனர்.

ஒரு போராளிக்கும் ரகசியப் பொலிஸாருக்குமிடையே நடந்த பேச்சுக்களை தற்செயலாகக் கேட்டபோது,

பொலீஸ்; உங்கள் பெயர் என்ன?

...க்கம் என்ற பெயர் கொடுத்திருக்கிறீர்களே.

போ: அடடா! மறந்துவிட்டேன்.

பொ: பெயரை ஏன் மாற்றிச் சொல்கிறீர்கள்.

போ: அது எங்கள் இஷ்டம் ஒருவரிடம் ராமசாமி என்போம். வேறு ஒருவரிடம் கிருஷ்ணன் என்போம், அது பேரில இப்போது என் பெயர் குப்புசாமி.

பொ: சரி அப்படியே எழுதிக் கொள்கிறேன், இங்கு ஏன் வந்திருக்கிறீர்கள்?

போ: இந்தியாவில் ஆடு எப்படிக் குட்டி போடுமென்று பார்க்க வந்தேன்.

பொ: விளையாடாதீர்கள்

போ: நான் எப்படிச் சொன்...

---

## படகுசேவை நேர அதிகரிப்பு

(புங்குடுதீவு)

புங் /குறிகட்டுவான் துறையிலிருந்து நயினாதீவிற்கான சேவையில் ஈடுபடும் படகுகள் இம்மாதம் 1ம் திகதி முதல் மாலை 5 00 மணி வரை சேவையில் ஈடுபடுகின்றன முன்பு இவை குறிகாட்டுவான் துறையிலிருந்து பி. ப. 3.30 மணியுடன் சேவையை நிறுத்திவந்தன. இதேவேளை நயினாதீவிலிருந்து குக்றிகட்டுவானுக்கான படகு சேவையிலும் நேரமாற்றங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது (22)

---

## பாண்டிச்சேரி முதலமைச்சர்

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரியில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள தி. மு. க. ஜனதாதள் கூட்டு முன்னணியின் முதலமைச்சராக டி. இராமச்சந்திரன் இம்மா...

---

## ஜனதாவும், பாரதீய ஜனதாவும் ஆட்சியமைக்க முயற்சி

(டில்லி)

இந்தியாவில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தல்களில் இரு மாநிலங்கள் தவிர ஏனைய மாநிலங்களில் பாரதிய ஜனதாக் கட்சியும், ஜனதாவும் தனித்தும், கூட்டாகவும் ஆட்சி அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஒரிசாவில் ஜனதா அரசாங்கமும், இமாலயப் பிரதேசம் மத்திய பிரதேசம் ஆகியவற்றில் பாரதீய ஜனதாக்கட்சியும் தனியாக ஆட்சி அமைக்கும் அதேவேளை ராஜஸ்தான் குஜாராத் மாநிலங்களில் கூட்டாகவும் ஆட்சியமைக்கவுள்ளனர்.

ஏனினும் கூட்டு அரசாங்கமே அமையும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஓரிசாவில்ஜனதாதளத்தைச் சேர்ந்த வி. யூ. பட்நாயக்கர் முதலமைச்சராக பதவியேற்கின்றார். அருணாசலப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த சாந்தகுமார் முதலமைச்சராக பதவியேற்கின்றார். குஜயராத்தில் ஜனதாதளத்தைச் சேர்ந்த பட்டேல் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார். அதேவேளை இமாலயப் பிரதேசத்திலும், மத்திய பிரதேசத்திலும் தமது தலைவர்களை தேர்ந்தெடுக்க நாளை சட்டசபை உறுப்பினர்களின் கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

---

## இருபதினாயிரத்.....

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் ஆர்வத்தோடு செவிமடுத்தார்கள்.

இக்கூட்டத்தில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், மக்கள் முன்னணித் தலைவர் கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் யோகி, அம்பாறைப் பிராந்தியத் தளபதி கருணா, கவிஞர் காசி ஆனந்தன், உதவிச் செயலாளர் செல்வி. சுந்தரி, செங்கதிர், மௌலவி மொகமட், கே, என். மதுரைநாயகம், ஜனாப் சேகு அலி ஆகியோரும் பேசினார்கள்,

---

## கம்போடியா-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுத உதவி கொடுத்து வரு...

---

## உத்தரவின்றி-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரோத இறைச்சிக் கடைகள் யாவும் உடனடியாக அகற்றப்பட வேண்டும். இனிமேல் மாநகரசபை சுகாதார அதிகாரிகளிடம் உரிய முறையில் உத்தரவு பெறாது பழுதான, பாவனைக்கு உதவாத இறைச்சி விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்படியான சட்டவிரோதச் செயல்களை செய்பவர்களைப் பொதுமக்கள் இனங்கண்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு அறியத்தருமாறு வேண்டப்படுகின்றார்கள்.

---

## ஈழப் பிரகடனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், கடந்த சில வருடங்களாகப் பெருமாள் தன்னைத் தொடர்ச்சியாக ஒரு...

---

## கச்சதீவு உற்சவம் இம்முறையும் ரத்து

(விசேட நிருபர்)

ஒரு காலத்தில் சர்ச்சைக்கு உரியதாக விளங்கிய கச்சதீவு ... தும் யாத்திரிகர் கச்சதீவுக்கு வரக்கூடுமென்று நம்பப்படுகிறது. (21)

## இராஜினாமா

(சென்னை)

இந்தியப் பிரதமர் வி. பி. சிங் ஜனதாக்கட்சித் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். இதற்கன் காரணம் ஒரே நேரத்தில் ஒருவர் இரு பதவிகளில் அங்கம் வகிக்க முடியாமையாகும்.

லும் இந்நிலைமை எழுந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது.

யாழ்-மாநகர சபை சுகாதாரப் பகுதியினரும், பொது அமைப்புக்களும் இச் சீர்கேட்டில் தலையிட்டு ஆவன செய்ய வேண்டுமென பாதிக்கப்படுபவர்கள் நமது நிருபரிடம் தெரிவித்தனர். (21)

# கச்சதீவு உற்சவம் இம்முறையும் ரத்து

(விசேட நிருபர்)

ஒரு காலத்தில் சர்ச்சைக்கு உரியதாக விளங்கிய கச்சதீவு அர்ச் அந்தோனியார் ஆலய திருநாளுக்கும் யாத்திரிகர் பெருமளவில் இங்கிருந்து செல்லலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற வேண்டிய திருநாள் யாழ்-ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் நடைபெறமாட்டாதென அறிவிக்கப்பட்டிருந்தது அறிந்ததே.

இவ்வாறு நடைபெறாதென அறிவிக்கப்பட்ட பாலைதிவு அந்தோனியார் ஆலயத்திற்கு ஏறத்தாழப் பத்தாயிரம் யாத்திரிகள் சென்றிருப்பதும் தெரிந்ததே.

இவ்விதம் ஈழத்தில் இருந்து யாத்திரிகர் கச்சதீவுக்குச் சென்றால் தமிழகத்தில் இருந்தும் யாத்திரிகர் கச்சதீவுக்கு வரக்கூடுமென்று நம்பப்படுகிறது. (21)

## தீர்மானம்

(விசேட நிருபர்)

வட இலங்கை சிறை அலங்கரிப்பாளர் சங்கத்தின் கூட்டம் கடந்த 2-ஆம் திகதி வெள்ளிக்கிழமை அச்சுவேலியில் காப்பாளர் அ. ஞானப்பிரகாசதாஸ் தலைமையில் நடைபெற்றது.

பல பிரதிநிதிகள் கலந்து கொண்ட மேற்படி கூட்டத்தில் சங்கத்தால் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கும் கட்டண விகிதங்களைக் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது. (21

(சென்னை)

தமிழகத்தின் பல பகுதிகளில் தங்கியுள்ள போராளிகளை நேரடியாக விசாரிக்கச் செல்லும் புலனாய்வுத்துறையினர் படாதபாடுபடுகின்றனர். ராமேஸ்வரத்திலும், மண்டபம் முகாமிலும் தங்கியுள்ள தமிழ்ப் போராளிகளைச் சந்திக்க அவ்வப்போது ரகசியப் பொலிஸார் செல்கின்றனர்.

மேற்படி ரகசியப் பொலிஸார் கேட்கும் கேள்விகளுக்கு கிண்டலாகப் பதிலளிக்கின்றனர்.

ஒரு போராளிக்கும் ரகசியப் பொலிஸாருக்குமிடையே நடந்த பேச்சுக்களை தற்செயலாகக் கேட்டபோது,

பொலீஸ்; உங்கள் பெயர் என்ன?

போராளி: குப்புசாமி

பொ; நேற்றிரவு ராஜமாணிக்கம் என்ற பெயர் கொடுத்திருக்கிறீர்களே.

போ: அடடா! மறந்துவிட்டேன்.

பொ: பெயரை ஏன் மாற்றிச் சொல்கிறீர்கள்.

போ: அது எங்கள் இஷ்டம் ஒருவரிடம் ராமசாமி என்போம். வேறு ஒருவரிடம் கிருஷ்ணன் என்போம், அது பேரில இப்போது என் பெயர் குப்புசாமி.

பொ: சரி அப்படியே எழுதிக் கொள்கிறேன், இங்கு ஏன் வந்திருக்கிறீர்கள்?

போ: இந்தியாவில் ஆடு எப்படிக் குட்டி போடுமென்று பார்க்க வந்தேன்.

பொ: விளையாடாதீர்கள்

போ: நான் எப்படிச் சொன்னேனோ அப்படியே எழுதுங்கள். எதற்காக வந்தேன் என்று மீண்டும் மீண்டும் கேட்டால் இனிப் பொய்தான் சொல்லுவேன்.

பொ: கேட்க வேண்டியது எங்க்ள் கடமை. கேட்டோம் சரி, எப்போது ஊருக்குப் போகிறீர்கள்?

போ; அதைக் கூறமுடியாது. வந்த வேலை முடிந்தால் போய்விடுவோம். ஏன் எங்களைத் தொந்தரவு செய்கிறீர்கள் (சற்று எரிச்சலுடன்)

பொ: உண்மையைச் சொல்ல மாட்டீர்களா?

போ: நாங்கள் எங்களைப் பற்றி முழு உண்மையையும் உங்களிடம் சொன்னால், அந்தத் தகவல் வெளியாகி விடுகின்றது.

பொ: சரி நாங்கள் புறப்படுகிறோம். நீங்கள் சொன்னதை மேலே சொல்லிவிடுகிறேன்,

(சக போராளியிடம் ஏதோ கூறிச் சிரிக்கிறார்.)

தமிழகத்திலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று இதைப் பிரசுரித்துள்ளது.

## முகாம் மூடப்படல்

(சாம்பல்தீவு)

திருகோணமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு கிராம சபை, 6ஆம் கட்டை தண்ணீர் தாங்கி ஆகிய இடங்களிலும் மற்றும் இலுப்பங்குளம் பகுதியிலும் தங்கியிருந்த இந்திய இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

## கப்பலில்--.--

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

பப் படிவத்தை நிரப்பிக் கொடுத்து அகதி அந்தஸ்து பெறவேண்டுமென, ஈ. பி. ஆர்.எல்.எவ். வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வியக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினரான யோக சங்கரியும் இதனை ஊர்ஜிதம் செய்தார் என தி ஐலன்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

## அநுராதபுரத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதில் மாழிப்பிரச்சனையும் சிக்கலாகவுள்ளது என விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாகவே இவ்வேலைகளைக் கவனிக்கும் பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் வவுனியாவில் இருந்ததோடு இத்திட்டங்கள் யாவும் கடந்த பல வருடங்களாக வவுனியா பிரதிப் பணிப்பாளரின் நிர்வாகத்தின்கீழ்இயங்கிவந்தன எனவே இவ்வேலைகளைக் கவனிக்கும் பிரதிப் பணிப்பாளரின் அலுவலகம் இப்பகுதியிலேயே அமைய வேண்டுமென இப் பகுதிமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## வெங்கட்ராமன் டில்லி பயணம்

(சென்னை)

தமிழக சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி வெங்கட்ராமன் முன்னாள் பிரதமர் ரஜீவ் காந்தியின் வேண்டுகோளின் பேரில் ஒரு நாள் முன்னதாக நேற்று புதுடில்லி புறப்பட்டார். நேற்று சென்னை வந்த ஜனாதிபதி காஞ்சிபுரம் சென்று காஞ்சி மடாதிபதிகளைச் சந்தித்து ஆசிகள் பெற்றதோடு, அண்ணா பல்கலைக்கழக விழாவில் இறுதியாகக் கலந்துகொண்டு, தனது தமிழ் நாட்டுச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார்.

சேவையில் ஈடுபடும் படகுகள் இம்மாதம் 1ம் திகதி முதல் மாலை 5 00 மணி வரை சேவையில் ஈடுபடுகின்றன முன்பு இவை குறிகாட்டுவான் துறையிலிருந்து பி. ப. 3.30 மணியுடன் சேவையை நிறுத்திவந்தன. இதேவேளை நயினாதீவிலிருந்து குறிகட்டுவானுக்கான படகு சேவையிலும் நேரமாற்றங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது (22)

## பாண்டிச்சேரி முதலமைச்சர்

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரியில் ஆட்சியைக் கைப்பற்றியுள்ள தி. மு. க. ஜனதாதள் கூட்டு முன்னணியின் முதலமைச்சராக டி. இராமச்சந்திரன் இம்மாதம் எட்டாம் திகதி பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். கவனர் சந்திராவதி இவருக்கு பதவிப்பிரமாணமும், இரகசிய காப்புப்பிரமாணமும் செய்து வைப்பார்.

## கிழக்கில்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி விரிவாக ஆராய்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் முடிவில் இரு பகுதியினரும் பரஸ்பரம் புரிந்துணர்வோடு பிரச்சனைகளை புரிந்து கொண்டதாகவும் இச் சந்திப்பு பூரண திருப்தி தந்ததாகவும் நமது நிருபரிடம் தெரிவித்தனர்.

## மருதங்கேனி...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வைத்தியசாலையிலிருந்து பெறக்கூடிய சேவையினைப் பெற்றுக் கொண்டு வருகின்றார்கள்.

இவ் வைத்தியசாலையில் சுமார் 2 வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட பற்சிகிச்சைப் பிரிவு சில மாதங்கள் மட்டும் இயங்கியதுடன் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.

போக்குவரத்துக் கஷ்டமும், ஏனைய தொலைத் தொடர்பு வசதியும் இல்லாத இவ் வைத்தியசாலைக்கு 'அம்புலன்ஸ்' வண்டி இல்லாதது பெரும் குறைபாடாகவுள்ளது.

இவ் வைத்திய சாலையில் தனியான பிரசவ விடுதி வசதி இல்லாமையினால், பிரசவிக்கும் குழந்தைகளும், ஏனைய நோயாளர்கள் ஒரு வாட்டில் தங்கியிருக்க வேண்டிய அபாயகரமான நிலை காணப்படுகின்றது.

இத்தகைய குறைபாடுகள் பற்றி அப் பகுதியில் உள்ள பொது ஸ்தாபனங்கள் சுகாதார உயரதிகாரிகளின் கவனத்தின் கீழ் கொண்டு வந்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை என குறைபட்டுக் கொள்கின்றார்கள்.

## இருபதினாயிரத்.....

(1ஆம்பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் ஆர்வத்தோடு செவிமடுத்தார்கள்.

இக்கூட்டத்தில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், மக்கள் முன்னணித் தலைவர் கோபாலசாமி மகேந்திரராஜா (மாத்தயா), செயலாளர் நாயகம் யோகி, அம்பாறைப் பிராந்தியத் தளபதி கருணா, கவிஞர் காசி ஆனந்தன், உதவிச் செயலாளர் செல்வி. சுந்தரி, செங்கதிர், மௌலவி மொகமட், கே, என். மதுரைநாயகம், ஜனாப் சேகு அலி ஆகியோரும் பேசினார்கள்,

## கம்போடியா-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயுத உதவி கொடுத்து வருமானால் தமது அரசு கம்போடிய அரசிற்கு ஆயுத உதவி வழங்குவது தவிர்க்க முடியாமல் போய்விடும் என கம்போடியாவில் உள்ள ரஷ்ய தூதுவர் தெரிவிக்கின்றார்.

## நாகூர்--.--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்டதன் விளைவாக நாகூர் கடற்கரையில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள், துப்பாக்கிகள்மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சில வாரங்களுக்கு முன்னர் வேதாரணியம் கடற்கரையில் ஈ.என்.டி.எல்.எவ் இயக்கத்தால் புதைத்து வைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான ஆயுதங்கள் தமிழ்நாடு பொலிசாரால் மீட்கப்பட்டமை தெரிந்ததே.

விரோத இறைச்சிக் கடைகள் யாவும் உடனடியாக அகற்றப்பட வேண்டும். இனிமேல் மாநகரசபை சுகாதார அதிகாரிகளிடம் உரிய முறையில் உத்தரவு பெறாது பழுதான, பாவனைக்கு உதவாத இறைச்சி விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்படியான சட்டவிரோதச் செயல்களை செய்பவர்களைப் பொதுமக்கள் இனங்கண்டு, சம்பந்தப்பட்டவர்களுக்கு அறியத்தருமாறு வேண்டப்படுகின்றார்கள்.

## ஈழப் பிரகடனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், கடந்த சில வருடங்களாகப் பெருமாள் தன்னைத் தொடர்ச்சியாக ஒரு மிதவாதி என்று மற்றவர்கள் நம்பும்படியான ஒரு தோற்றத்தை உருவாக்கியுள்ளார். பெருமாளின் இந்தத் தந்திரோபாயம் வெற்றி தருமா என்பதை காலம்தான் தீர்மானிக்கவேண்டும். முன்னால் முதலமைச்சர் பெருமாளின் கோபமூட்டும் இச்செயல் எப்படியிருந்தாலும், இச்சமயத்தில் விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் பிணக்குப்படுவது அவர்களுக்கு கட்டுப்படி ஆகாது.

எப்பொழுதும் தமக்கு எது வேண்டுமென்றாலும் அதைப் பற்றிய தெளிவு விடுதலைப் புலிகளுக்கு இருப்பதுதான் அவர்களது வெற்றிக்கான காரணமாகும். ஆனால் புலிகள் பெருமாளின் இந்தக் கோமாளித்தனத்தைக் கண்டு தமது செயற்பாடுகளில் தடுமாற மாட்டார்கள்

-- இவ்வாறு தறாக்கி குறிப்பிடுகிறார்.


# யூனிவேர்சல்

கல்வி நிறுவனம்

ஆசிரியர்கள் மாணவர்கள் பங்கேற்கும்

# கிரிக்கெட்போட்டி

காலம்:- 05-03-1990 (இன்று)

(பி.பகல் 3-00 மணி தொடக்கம் 6-00 மணி வரை)

இடம்;- யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம்.

B 158



## நடேஸ்வராக் கல்லூரி

காங்கேசன்துறை.

## இல்லங்களுக் கிடையிலான மெய்வல்லுநர் போட்டி - 1990

# அழைப்பிதழ்

காலம்: 1990-03-06 (நாளை) செவ்வாய்க்கிழமை காலை 08-30 மணிக்கு

இடம்: கல்லூரி விளையாட்டு மைதானம்

தலைவர்: திரு. க. இராசதுரை, (கல்லூரி அதிபரும் காங்கேசன்துறைக் கொத்தணி அதிபரும்)

பிரதம விருந்தினர்: திரு. எம். சிவராசரத்தினம் (முன்னாள் அதிபர்) (கல்வி அதிகாரி பண்டத்தரிப்புக் கோட்டம்)

பெற்றார், பழைய மாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும், அன்புடன் அழைக்கின்றோம்.

(B/166) அதிபர், ஆசிரியர், மாணவர்.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.